பெரிய எழுத்து நல்லதங்காள் கதை

ஐதீகப்படங்களுடன்

விலை அணா 8

OFFICE OF ... AR OF
11 NOV 1954
8GPU,N
N54
77066

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப் புலவர் இயற்றிய

பெரிய எழுத்து

நல்லதங்காள் கதை

[ஐதீகப் படங்களுடன்]

ஸ்ரீமகள் கம்பெனி

122, வரதா முத்தியப்பன் தெரு: சென்னை. 1

இதன் விலை] [அணா 8

உ

கடவுள் துணை

நல்லதங்காள் கதை

தோத்திரங்கள்

கலி விருத்தம்

இந்துவேணியனீஸ்வரியே பொற்பினில்
நத்துவாமிந்த நல்லதங்காள் கதை
முத்துசெந்தமிழ் மொழியவொருகொம்பு
சிந்தூரமிருசேவடி போற்றியே.

விநாயகர் துதி

வேழமுகத்தோனே விநாயகரே முன்னடவாய்
பேழைவயிற்ருேனே பெருமாள்மருகோனே
அத்திமுகத்தோனே அரனுர் திருமகனே
சத்திக்கணபதியே சரிந்தவயிற்ருேனே
கரிமுகப்பிள்ளையாரே கணபதியேமுன்னடவாய்
பிரியமாய்நல்லதங்காள் பெண்ணின்கதைபாட
அறியாதான்நாவதனில் அன்பாய்வருவதற்கு
துரிதமுடனே துணையாக நீவருவதற்கு
தும்பிக்கையுள்ளவரே துன்பங்கள்வாராமல்
நம்பிக்கைவைத்தெந்தன் நாவில்குடியிருந்து
ஆனைமுகப்பிள்ளையாரே ஐங்கரனேமுன்னடவாய்
பானைவயிற்ருேனே பரமரிடபுத்திரனே
பாடவேயெந்தனுக்கு பகவானேவந்தருளும்

சிவசுப்பிரமணியர் துதி

திருத்தணிகைவேலவனே திருமால்மருகோனே
கருத்துவைத்துயெந்தனை நீ காத்தருளவேணுமையா
வள்ளிமணவாளா மகேஸ்வரனுர்புத்திரனே
புள்ளிமயிலேறும் புண்ணியப்போரூரா
நல்லதங்காள்கதையை நலமாகப்பாடுதற்கு
புல்லறிவன்என்னுவில் புண்ணியரே நீயிருந்து
கூடத்துணையிருந்து குற்றங்கள்வாராமல்
பாடத்துணையெந்தனுக்குப் பகவானேவரக்கருளும்

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE, MADRAS-8
No 77066

சரஸ்வதி துதி

தாமரைசெங்கமலம் தன்னிற்பிறந்தவளே
கோமளசரஸ்வதியே கொம்பனையாள்நல்லதங்காள்
புண்ணியவதிகதையைப் புகழாகப்பாடுதற்கு
எண்ணியிருந்த எளியேனுடனாவில்
சாந்தமாய்ப்பாடுதற்கு தொகையேயிப்போது
வந்துகுடியிருப்பாய் மறையவனார்தேவியாரே
பூவிலுதித்ததொரு பொற்கொடியேயெந்தனுக்கு
நாவிற்குடியிருந்து நடத்துமம்மாயிக்கதையை

சந்தக்கலி விருத்தம்

மஞ்சுகுழல்பிஞ்சுமலை வஞ்சிநல்லதங்காள்
விஞ்சுவரலாறுசொல மிஞ்சுசிவனார்முன்
கொஞ்சுமுலைமாதுதரு குஞ்சரகணேசன்
செஞ்சரணகஞ்சமல ரஞ்சலிசெய்வாமல்

கதையின் வரலாறு

திங்கள்மும்மாரிபெய்யுஞ் சீரானநன்னாடு
எங்குமணிவிளையும் எழிலானநன்னாடு
செஞ்சாலிநெல்விளைந்து செழிக்கும்வளநாடு
தஞ்சலிறையாமல் தழைக்கும்வளநாடு
நாற்றைப்பிடுங்கிபள்ளர் நன்றாய்நடுவார்கள்
சேற்றைக்குழப்பிபள்ளர் திறமாய்நடுவார்கள்
வயலிற்களைபிடுங்கி மாதர்கள்போடுவார்கள்
கயலென்றுதங்கள்கண்ணைக் கருதியேதேடுவார்கள்
தோள்மேலெடுப்பார்கள் சுமந்துநடப்பார்கள்
ஆள்மேலெடுப்பார்கள் அசைந்துநடப்பார்கள்
கார்நெல்லறுப்பார்கள் களத்தண்டைகொட்டுவார்கள்
வார்கொள்மாட்டைப்பிடித்து வந்துபிணைகட்டுவார்கள்
மாரிநெல்லுதிரும்படி சார்ந்தேயுழுவார்கள்
இனிதானதொழில்களிலே ஏதும்வழுவார்கள்
ஏரடிக்கும்பண்ணையாட்கள் எங்குந்திரிவார்கள்
போரடித்துநெற்படுத்திப் பூஜைபுரிவார்கள்
பூங்காப்பெருமைதனைச் சொல்லமுடிபோகாது
பூங்காவனப்பெருமை புகழத்தொடங்கினேன்காண்

துலங்குவாழைமரங்கள் இலங்கு பலாமரங்கள்
குலுங்கும்பாக்குமரங்கள் நலங்கொள்தேக்குமரங்கள்
மாமரச்சோலைகளும் மருதிலுப்பைச்சாலைகளும்
தாமமிகுசந்தனமும் தவனமிகுந்தவனமும்
தக்கசாமந்திகளும் சண்பகப்பூப்பந்திகளும்
மிக்ககுயில்பாட வீறுமயிலாட
ஆண்டிகள் தங்குமிடம் அரவிந்தம்பூத்தவிடம்
பாண்டிமகாநாட்டில் பாகமிகவுண்டென்று
முதுவரிளைஞரெல்லாம் முன்னுரைத்தசாஸ்திரத்தில்
மதுராபுரியென்று வானவர்முதல் சொல்லுவார்கள்
திக்கெட்டும்மன்னர்பதம் தென்மதுரைமாநகரம்
சூழ்வினை துன்பமெல்லாம் தொலைக்குந்திருநகரம்
வாழ்விக்கும் அட்டசெல்வம் மன்னுந்திருநகரம்
வாணுளரியபிரமா வந்திருக்குந்திருநகரம்
மீனாட்சிமாதுமையாள் மேவுஞ்சீர்பொன்னகரம்
உப்பரிகைமாளிகையும் உயர்ந்தபெருமாளிகையும்
செப்பரியமாடங்களும் சேர்ந்தசித்திரகூடங்களும்
செம்பொன்னுற்கோட்டைகளும் திகழரியபேட்டைகளும்
அம்பொன்னுற்கோயில்களும் அழகானகோயில்களும்
முத்துச்சிவிகையெறி முடிமன்னர்வீதிகளும்
தத்துப்பரியேறும் தடமன்னர்வீதிகளும்
கோல்கொடுக்கும்வேளாளர் கூர்ந்துவாழ்வீதிகளும்
சாத்திரஞ்சொல்கின்ற சதுர்மறையோர்வீதிகளும்
காத்திரஞ்சேர்வாணிபஞ்செய் கனவணிகர்வீதிகளும்
வேல்கொடுக்கும்மன்னர்பலர் மேவியேவாழ்வீதிகளும்
கொட்டிதட்டிபணிகள்செய்யும் கொல்லர்வாழ்வீதிகளும்
தட்டிப்பணிகள்செய்யும் தட்டாரவீதிகளும்
பதினெட்டுஜாதிவகை பலமன்னர்வீதிகளும்
துதிபெற்றமதுரையிலே சொல்லவுங்கூடாது
தராதலத்துமன்னர்களில் சந்திரகுலத்துதித்தோன்
நராதிபனும்ராமலிங்க நல்லமகாராசன்
மணிமகுடந்தாங்க மனக்களிப்புமேலோங்கி
அணிமதுரைப்பட்டணத்தை அரசாட்சிசெய்யவென்று
செங்கோல்பிடித்துச் சிறப்போடரசுரிமை

மங்காதமண்டலத்தை மனுநீதிதப்பாமல்
ஆறிலொருகடமை அரசனும்வாங்குவான்காண்
மாறியெவர்க்கும் வாக்குபிசகானே
இந்தபுவிதனிலே இந்திராணியென்பவளைச்
சுந்தரமாய்த்தாலிகட்டி சுகிர்தமுடனரசிற்
சிங்காதனமேறித் தேர்வேந்தர்வீற்றிருந்தார்
வேதியரும்சோதிடரும் வேந்தர்முகம்பார்த்து
நீதியெடுத்து நிகழ்த்தலுற்றார்மன்னனுக்கு
எட்டுநவகோண மூலகாளும்மயில்வேந்த
பட்டந்தனக்குப்பிள்ளை பாராளவில்லையே
தங்களரசுரிமை தானுளவில்லையே
எங்களரசனே யாங்களென்னசெய்வோமென்றார்
சொன்னமொழிகேட்டுத் தோன்றல்சினமடைந்து
தன்னரசுபட்டமாளத் தான்பிள்ளையில்லையென்று
எண்ணுவிசாரமுடன் ஏக்கமிகவடைந்து
மண்ணுளும்செங்கோல் மந்திரிதமக்கீந்து
மனைவிதனையழைத்து வன்காட்டிடஞ்சென்று
களையடர்ந்தமேருவிடந் தோன்றல்மனைவியுடன்
உலகாண்டதைமறந்து ஊமைமௌனியர்போல்
இலகுதிருநீற்றை எங்குமேதானணிந்து
சலியாதுருத்திராட்சந் தானணிந்துமனைவியுடன்
புலியாசனம்போட்டுப் பொற்பாயிருபேரும்
புல்லும்படியமர்ந்து பூசைவழிபாடு
அல்லும்பகலுமாக வாசியாலேசிவனை
மனத்திலிருத்தியே வந்தித்தார்சிந்தையுள்ளே
கனகவுமைமாது கண்டாளிவர்தவசை
பரமசிவனைநோக்கிப் பார்வதியாள்சொல்லுகிறாள்
வரமிகுந்தமாதேவா மாதவத்தைக்கண்டீரோ
பிள்ளைக்குவேண்டுகிற பெருந்தவசைப்பார்த்தீரோ
கொள்ளையிதுவரையில் குவலயத்திற்கண்டறியோம்
தவசுக்குத்தான்மகிழ்ந்து தக்கமைந்தனைக்கொடுப்பீர்
சிவபெருமான்கண்டு சிந்தைமகிழ்ச்சிகொண்டு
எருதேறியிருவருமே ஏகாந்தமாகவந்தே
விருதுபெறமைந்தனை விரும்பிமிகக்கொடுத்தார்

பெண்ணென்றுபிள்ளையொன்று பிறக்கும்படிகொடுத்தார்
மண்ணரசன்மனைவியோடு மாதாவைத்தான்தொழுது
விமலனைப்போற்றிசெய்து வீடுவந்துதான்சேர்ந்தார்
நமக்கிரண்டாண்டுக்குள் தனயர்பிறந்திடவே
தக்கமைந்தனுக்கும் நல்லதம்பியென்றுபெயருமிட்டு
ஒக்கநல்லதங்கையென உத்தமியைத்தான்வளர்த்தார்
பள்ளிக்குவைத்தார்கள் பாலரிருவரையும்
தெள்ளுதமிழ்தெலுங்குந் தேர்ந்தேயுணர்ந்தார்கள்
வில்வித்தையானையேற்றம் மிக்ககுதிரையேற்றம்
கல்விப்பயிற்சியெல்லாம் கற்றுத்தெளிந்தார்கள்
மைத்தன்றனக்கு மணமுடிக்கவேண்டுமென்று
குந்தளதேசமாளும் கோமுகன்பெற்றெடுத்த
மூளியலங்காரி மொய்குழலாள்நாயகியை
நாளிட்டுகேட்டு நல்லமணமுடித்தார்
மணமுடித்தபத்தாநாள் மாதாயிறந்துவிட்டாள்
இணையிலிந்திராணிபோக இராமலிங்கமகாராசன்
மனைவியும்போனவுடன் மைந்தனையழைத்து
தனையன்தனக்கரசை தானீந்துசொல்லலுற்றார்
நல்லதம்பியிவ்வுலகை நாளுண்டவாறுபோல
வல்லமுடிதரித்து மண்ணுலகில்மாந்தர்க்கு
குறைவுவாராமலேநீ குடிகளனைவோருக்கும்
நிறைசெங்கோல்கேணுது நீதிசெலுத்திடுவாய்
உந்தனுடன்பிறந்த உற்றநல்லதங்காளை
எந்நாளும்பசுமை யெய்துமிருக்குமிடம்
ஆராய்ந்துபார்த்து அழகாய்மணமுடித்து
சீராகச்சீதனங்கள் சிந்தைமகிழ்ந்திருந்து
அரசாட்சியுலகை யாண்டிருப்பாயென்றுசொல்லி
பிச்சுமலர்க்கொன்றைப் பெம்மானையுள்ளிருத்தி
இராமலிங்கமன்னவனும் இறந்தவுடன்நல்லதம்பி
கருமாதிகாரியங்கள் கனமாய்முடித்தாச்சு
ஒருபோதும்பொல்லாங்கு உலகத்துக்கெய்தாமல்
தேசுபெறச்செங்கோல் செலுத்தியேவாழ்ந்திருக்க
காசிமகாராஜன் கனமதுரைவந்துசேர்ந்து
நல்லதம்பியைநோக்கி நல்லதங்காள்நாயகியை

வல்லமணம்செய்ய வார்த்தைமிகப்பேசி
பரியங்கொடுத்தானே பத்துலட்சம்பொன்னிதிகள்
பிரியமுடன் நல்லதம்பி பெண்கொடுக்கவேயிசைந்தான்

திருக்கல்யாணச் சிறப்பு

சாந்தால்சரிகுழலே சற்குணமேநல்லதங்காள்
நாளிட்டநாள்முகூர்த்தம் நாடெங்கும்தானறியக்
கலியாணம்கலியாணம் காரிழைக்குக்கலியாணம்
என்றைக்குக்கலியாணம் எங்களிளம்கொடிக்கு
சித்திரைமாதத்திலே செல்வக்கலியாணம்
கலியாணமென்றுசொல்லி கடலேறிப்பாக்குவைத்தார்
மாட்டின்மேல்பாக்குவைத்து மனிதர்க்குப்போகவிட்டார்
சின்னமடிகோலிச் சீமையெங்கும்பாக்குவைத்தார்
பெரியமடிகோலிப் பூமியெங்கும்பாக்குவைத்தார்
பனையின்மரம்பிளந்து பந்தக்கால்செப்பனிட்டார்
தென்னமரம்பிளந்து தெருவெல்லாம்பந்தலிட்டார்
வன்னிமரம்பிளந்து வாசக்கால்செப்பனிட்டார்
முத்துமரம்பிளந்து முகூர்த்தக்கால்செப்பனிட்டார்
இட்டார்கள்பந்தலே இருபதுகாதவழி
தொட்டார்கள்பந்தலே தொண்ணூற்றுக்காதவழி
முந்நூறுபார்ப்பார்கள் நாளிட்டமங்கலியம்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
கட்டுங்கள்தாலியைக் கழுத்திலேயென்றுரைத்தார்
தாலிதரிப்பதற்கு தார்வேந்தனப்போது
அஸ்தமிட்டமங்கிலியம் அவ்வரசன்தான்வாங்கி
அரகராவென்றுசொல்லி அணிந்தாரேமங்கிலியம்
கன்னித்திருக்கழுத்தில் கட்டினன்மங்கிலியம்
மாதுதிருக்கழுத்தில் மாங்கிலியஞ்சூட்டினரே
தாலிதரித்தபின்பு தார்வேந்தன்நல்லதம்பி
வந்தவுறன்முறைக்கு வழங்கினன்போஜனங்கள்
தாம்பூலபுஷ்பமுதல் தான்கொடுத்தார்வந்தவர்க்கு
பந்தல்சபைதனிலே வந்தவர்கள்முன்பாக

சீதனச் சிறப்பு

கலியாணவாசலிலே என்னனென்னசீதனங்கள்
என்னெென்னசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்

சீதனங்களில்லையென்று சீர்குழலேயேசாதே
பட்டிநிறைந்திருக்கும் பால்பசுவாஞ்சீதனங்கள்
எரிநிறைந்திருக்கும் எருமைமாடாஞ்சீதனங்கள்
காடுநிறைந்திருக்கும் கருப்பாடாஞ்சீதனங்கள்
வேட்டுக்கழனி முளக்களனிசீதனங்கள்
பள்ளக்கழனி பயிர்க்கழனிசீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியாள்
இன்னமுண்டுசீதனம் எங்களிளங்கொடிக்கு
சீதனங்களில்லையென்று சீர்குழலேயேசவேண்டாம்
வரிசைகளில்லையென்று வார்குழலேயேசவேண்டாம்
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளம்கொடிக்கு
தோளுக்குத்தோளு துளசிமணிசீதனங்கள்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமைகளுடன்
கையிற்கரிபவளங் கனகமணிதாவடங்கள்
மார்புசரப்பளியாம் வயிரமணிசீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
சீதனங்களில்லையென்று சீர்குழலேயேசாதே
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
உட்கட்டுத்தாலி யுருக்குமணிஆபரணம்
உட்கார்ந்துமோர்கடைய முக்காலிபொன்னாலே
சார்ந்திருந்துமோர்கடைய சாறுமணைபொன்னாலே
பிடித்துப்பால்கறப்பதற்கு பிடிகயறும்பொன்னாலே
அணைந்திருந்துபால்கறக்க அணைகயறும்பொன்னாலே
அந்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
ஆலாத்திபெண்களிலே ஆறுலட்சம்பெண்களும்
பாக்குநறுக்கியிடும் பரிவாரமெத்தவுண்டு
வெற்றிலைசுருள்மடிக்கும் வெள்ளாட்டிப்பெண்களுமாம்
தெற்குத்தெருநிறைந்த தென்னமரச்சோலைகளாம்
வடக்குத்தெருநிறைந்த வாழைமரச்சோலைகளாம்
கிழக்குத்தெருநிறைந்த கிளாமரங்கள்சீதனங்கள்
மேற்குத்தெருநிறைந்த விளாமரங்கள்சீதனங்கள்
குத்துமுலக்கைகளும் கூடைமுறம்சீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியாள்

நல்லநங்காளும் காசிராசனும் தங்கள் தேசம் போகுதல்

சீதனங்கள்தான்கொடுத்து சிறப்பாகநல்லதம்பி
தங்கைமுகம்பார்த்து தார்வேந்தனேதுரைப்பான்
ஏறுமம்மா தண்டிகையில் என்பிறவிநாயகமே
ஏறுமென்றுசொன்னவுட னிளங்கொடியும்கண்சிவந்து
அடித்துப்புரண்டழுதாள் ஆபரணமற்றுவிழ
முட்டியழுதாளே முத்துமணியற்றுவிழ
கட்டியழுதாளே கனகமணிசூழன்றுவிழ
தாவியழுதாளே தலையணைமெத்தையிலே
அப்போதுநல்லதம்பி அறியவெடுத்துரைப்பான்
ஏண்டியம்மா தங்கையுனக் கித்தனைகோபமென்ன
மதுரையறுகாதம் வாழ்மதுரை முக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரை முக்காதம்
நீ—நினைத்தபிரகாரம் நான்தருவேன் தங்கையென்றான்
பாலால்குறச்சலுண்டோ பாக்கியத்தால்தாழ்ச்சியுண்டோ
சாலால்குறைச்சலுண்டோ சம்பத்தால்தாழ்ச்சியுண்டோ
பூவால்குறைச்சலுண்டோ பொற்கொடியேநாயகமே
ஏறுமம்மா தண்டிகையில் என்பிறவிநாயகமே
நீயேறும்தண்டிகைக்கு முன்தண்டிநம் ,, தென்றான்
தோழியரும்முன்னடக்க தோகைமயிலணைக்கு
பாங்கியர்கள்முன்னடக்க பாவையிளங்கொடிக்கு
பாவையர்கள் தானடக்கப்பத்தினியும்வழிநடந்தாள்
காலாளுஞ்சேவகரும் காவலரும்முன்னடக்க
கத்திகட்டுஞ்சேவகர்கள் கன்னடியர்முன்னடக்க
ஈட்டிப்பிடிமன்னவர் இருபுறமும்சூழ்ந்துவர
யானையுஞ்சேனையும் அத்தனையும்முன்னடக்க
குதிரைபரிவாரம் கோடிதளம்பின்னடக்க
கட்டியங்கூறிவர கவிவாணர்பாடிவர
சிங்காரதேவதாசி தெருவில்நடனம்புரிய
ஊர்வசிரம்பையைப்போல் உலாவிநடனம்புரிய
புகுந்தாளரண்மனையில் புருஷனிணைபிரியாள்
எதிரொருவரில்லாமல் எல்லையரசாண்டிருந்தாள்
மற்றொருவரில்லாமலே மதுரையிலேவாழ்ந்திருந்தாள்
வாழும்பெருமைகளை வாக்குரைக்கக்கூடாது

வாழ்ந்திருக்கும்போதே மகாதேவர்தன்னருளால்
இளிமொழிமாதுக்கு கெர்ப்பமதுவுண்டாகி
ஏழுவருஷத்துக்குள் ஏழுபிள்ளைபெற்றெடுத்தாள்
பெற்றபிள்ளைநல்லதங்காள் பேருண்டாய்வாழ்ந்திருந்தாள்

நல்லதங்காளுக்கு பஞ்சகாலம் வந்தது

வாழ்ந்திருக்கும்நாளையிலே வாழ்வரசிசீமையிலே
பன்னிரண்டொருவருஷம் பாரமழைபெய்யவில்லை
சிறுசம்பாபெருசம்பா சீரகச்சம்பாவரகு
கார்நெல்குண்டுசம்பா கம்புதினைகேழ்வரகு
துவரை அவரைகொள்ளு சோளம்நவதானியமும்
நாட்டில்மழையுமில்லை நல்லவிளைவுமில்லை
தேசஞ்செழிப்புமில்லை செந்நெல்விளைவுமில்லை
இப்படியாகப்பஞ்சம் நேர்ந்ததிளங்கொடிக்கு
வாராதபஞ்சமென்ன வந்ததிளங்கொடிக்கு
பொல்லாதகாலமென்ன சொல்லாமல்வந்ததிங்கே
மரக்காலுருண்டபஞ்சம் மன்னரைத்தோற்றபஞ்சம்
நாழியுருண்டபஞ்சம் நாயகனைத்தோற்றபஞ்சம்
ஆழாக்குருண்டபஞ்சம் ஆளனைத்தோற்றபஞ்சம்
தாலிபறிகொடுத்து தனிவழியே நின்றபஞ்சம்
கணவனைப்பறிகொடுத்து கைக்குழந்தைவிற்றபஞ்சம்
இப்படியாக இளங்கொடிக்குவந்திருக்க
அப்பெரியபஞ்சத்திலே ஆரணங்கேதுசெய்தாள்
தாலிதவிரவைத்து தங்கமெல்லாம்விற்றுவுண்டாள்
மாலைதவிரவைத்து மற்றதெல்லாம்விற்றுவுண்டாள்
ஆலாத்திப்பெண்களிலே ஆறுலட்சம்விற்றுவுண்டாள்
பாக்குநறுக்கியிடும் பணிப்பெண்ணைவிற்றுவுண்டாள்
வெற்றிலைசுருள்மடிக்கும் மெல்லியரைவிற்றுவுண்டாள்
மரங்கள்முதலானதும் வந்தமட்டும்விற்றுவுண்டாள்
குத்துமுலக்கைகளை கூடைமுறம்விற்றுவுண்டாள்
அண்ணனிடசீதனத்தை அத்தனையும்விற்றுவுண்டாள்
தமையனிடசீதனத்தை தவறாமல்விற்றுவுண்டாள்
தங்கப்பணிதியெல்லாம் தவிட்டுக்குவிற்றுவுண்டாள்
இத்தனையும்தான்விற்று ஏழையாய்நின்றாளே
தங்கப்பொருள்உண்டு தாங்கமுடியாமல்

தாங்கமுடியாமல் தாய்வீடுபோறேனென்றாள்
அண்டமுடியாமல் அண்ணன்வீடுபோறேனென்றாள்
பொறுக்கமுடியாமல் பிறந்தவிடத்தேபோறேனென்றாள்
இப்படியாக இளங்கொடியாள்தானுரைத்தாள்
அப்போதுஆளன் ஆரணங்குக்கெடுத்துரைப்பாள்
அடி-இப்போதுபோகின்றது இனிதல்லவுத்தமியே
வாழ்ந்துகெட்டுப்போனயானல் வலதுசிரிப்பாரோடி
கெட்டுநொந்துபோனயானல் கிளையிலுஞ்சேர்க்காரோடி
கண்டார்சிரிப்பாரோடி காசினியோரேசிடுவார்
பார்த்தார்நகைப்பாரோடி பாரிலுள்ளோரேசிடுவார்
உன்னைத்தநாயகிமார் உகந்துசிரிப்பாரோடி
வலதுக்கிடங்கொடாதே வார்குழலேநாயகமே
பொன்னேநவமணியே புனக்கிளியேசொல்கிறேண்டி
ஆனாலும்பெண்மயிலே அருங்கிளியேநாயகமே
தாலிகட்டிக்கொண்டமுதல் தனிவழியேபோனதில்லை
மாலையிட்டுக்கொண்டமுதல் மறுத்துநாம்போனதில்லை
இப்போதுபோகிறது இனிதல்லஉத்தமியே
தண்டிக்குத்தண்டிபெண்ணே சரியாகவாழ்ந்தோமானல்
வாவென்றழைப்பார்கள் வகையுண்டாய்பேசுவார்கள்
கெட்டமகள்போனயானல் கிழிந்ததடுக்கிடுவார்
வாழ்ந்தமகள்போனயானல் வண்ணத்தடுக்கிடுவார்
இப்போதுபோவதுனக் கியல்பல்லவுத்தமியே
சாணியெடுத்தாகிலும் தட்டிப்பிழைப்போமடி
கூலியெடுத்தாகிலும்நாம் கூடிப்பிழைப்போமடி
வேலிவிறகொடித்து விற்றுப்பிழைப்போமடி
இப்படியாககணவன் எடுத்துரைக்கும்வேளையிலே

நல்லதங்காள் புருஷன் மேல் தடுத்து தாய்வீடு செல்லல்

அப்போதுநல்லதங்காள் ஆளனுக்கேதுசொல்வாள்
பூமுடிக்குங்கூந்தலிலே புல்லெடுக்கக்காரணமோ
வேர்முடிக்குங்கூந்தலிலே விறகெடுக்கவென்விதியோ
சந்தனமிழைக்குங்கையால் சாணிதட்டகாரணமோ
குங்குமமெடுக்குங்கையால் கூலிவேலைசெய்யலாமோ
ஆனைகட்டியெங்களண்ணன் அத்திப்புரமாளுகிறான்
குதிரைகட்டியெங்களண்ணன் குவலயத்தையாளுகிறான்

என்-அண்ணனரண்மனைக்கு அரசாளப்போறேனென்
தமையனரண்மனைக்குத் தாய்வீடுபோறேனேன்ருள்
அப்போது ஆளன் அரிவையருக்கே துரைப்பான்
பேச்சிதனைக்கேளாமல் பெண்மயிலேபோருயோ
போறவிடந்தனிலே பிழைபோசம்வந்துவிடும்
என்றதைக்கேட்டு எடுத்துரைப்பாள் நல்லதங்காள்
புத்திரரை தான்வளர்த்து வருவேன்காண்புண்ணியரே
மைந்தரை நான்வளர்த்து வருவேன்காண்மன்னவரே
போய்பிழைத்துவாரேனென பொற்கொடிநமஸ்கரிந்தாள்
என்பேச்சுகேளாமல் ஏந்திழையேபோருயோ
கொண்டவனுர்வார்த்தை கோடுதவருதே
ஆளன்சொல்தள்ளாதே அரும்பாவிசண்டாளி
புருஷன்சொல்தள்ளாதே பொல்லாதசண்டாளி
நீபோனுலும்போருயடி புத்திரர்பதனமடி
மைந்தர்களுக்குச்சேதம் வந்ததெனக்கேட்டேனுனல்
காற்ருய்பறந்தாலும் கண்டதுண்டஞ்செய்திடுவேன்
மக்கள்பதனமடி மங்கையரே நடவுமென்ருன்
பிள்ளைபதனமடி பெண்ணே நடவுமென்ருன்
அப்போது நல்லதங்காள் ஆளனுக்குதெண்டனிட்டாள்
போய்வாரேனென்று புருஷனுக்குதெண்டனிட்டாள்
தோளில்ஒருபிள்ளைவைத்தாள் தோகமயிலனையாள்
பக்கத்தில்பிள்ளைவைத்து கடுகவழிநடந்தாள்
முதுகின்மேல்பிள்ளைவைத்து மொய்குழலாள்தானடத்து
பத்தினியும்முன்னடக்க பத்தாவும்பின்னடக்க
இருவருமப்போது இசைந்துவழி நடந்து
பார்ப்பாரதெருகடந்து பாளையர்வீதிவந்தார்
வன்னித்தெருகடந்து வாழரசர்வீதிவந்தார்
செட்டித்தெருகடந்து சேணியனுர்வீதிவந்தார்
வேளாளர்தெருகடந்து வேகமுடனுக
பலதெருவுந்தான்கடந்து பக்ஷமுடன்வாராளே
தேரோடும்வீதி தெருவீதிகோடியிலே

நல்லதங்காளுக்கு அவசகுனம் நேரிடுதல்

கன்னிகழியாப்பெண் கையில்நெருப்பெடுத்தாள்
வாழாக்குமரியவள் மீளாநெருப்பெடுத்தாள்

வண்ணான்வெளுத்ததொருபுடவைகண்டாள் மங்கையரும்
வாணியன்கூடையல்லோ வரக்கண்டாள் மங்கையரும்
ஓரிகுறுக்காச்சு ஒற்றைப்பார்ப்பானெதிரானான்
சாரைகுறுக்காச்சு சர்ப்பந்தடையாச்சு
காடையிடமாச்சு கருங்குறுமான்கட்டாச்சு
பூனைகுறுக்காச்சு புதுப்பானைமுன்னாச்சு
அப்போதுதன்கணவ னரிவையர்க்கே துசொல்வான்
ஆகாச்சகுனம்பெண்ணே போகாதேபெண்மயிலே
பொல்லாச்சகுனம்பெண்ணே போகாதேபெண்மயிலே
குட்டியிட்டநாகேந்திரன் குறுக்கேயிடமாச்சு
என்றுமவருரைக்க இயலானநல்லதாங்கள்
ஆகாச்சகுனத்தை அறிந்துவரவேணுமென்றாள்
பொல்லாச்சகுனத்தை போய்ப்பார்க்கலேணுமென்றாள்
போய்பார்த்துவாரேனென்று பூவையுந்தெண்டனிட்டாள்
பதிங்காதவழிதூரம் பத்தாவும்வழிவிட்டார்
மாதரைப்போகவிட்டு மன்னவனும் திரும்பிவிட்டார்
அப்போதுநல்லதங்காள் ஆரணங்குநடக்கலுற்றாள்
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனச்சாலைவிட்டு
இஞ்சிவனந்தாண்டி எலுமிச்சவனந்தாண்டி
சூரக்காய்காய்க்கும்வனம் சுண்டக்காய்காய்க்கும்வனம்
கொஞ்சிபழுக்கும்வனம் கோவைபடரும்வனம்
சிங்கமுறங்கும்வனம் சிறுபுலிகள் தூங்கும்வனம்
பேய்நுழையாக்கானகத்தே போய்புகுந்தாள் கட்டழகி
வழியுந்தெரியாமல் வகைதப்பி நின்றழுதாள்
அத்துவானகானகத்தில் ஆரணங்குபோய்நடந்தாள்
பூமரத்தின்சோலையிலே பொற்கொடியும்வந்துநின்றாள்
மாமரத்தின்சோலையிலே மங்கையரும்போய்நடந்தாள்
மக்களைச்சூழவைத்து மங்கைபுலம்பலுற்றாள்
பிள்ளைகளைச்சூழவைத்து பெண்பெருமாளழுகலுற்றாள்
மாமரத்தின்சோலையிலே மங்கைபுலம்புகிறாள்
பிள்ளையழுகிறதும் பெண்ணாள்கலங்குகிறதும்
கன்னியழுகிறதும் காளைபுலம்புகிறதும்
மக்களழுகிறதை மாமரமும்பார்த்தழுமாம்
அத்துவானகானகத்தில் அழுதுபுலம்புகையில்
ஏழுபிள்ளை நல்லதங்காள் இருந்துபுலம்புகையில்

ஆணுலழகுமன்னன் அண்ணன் நல்லதம்பி
ஆண்டிருக்கும்சீமையிலே அவனுடையமாளிகையில்

நல்லதம்பி கனவு காண்கிறது

தூக்கம்வருகிறதென்று தூங்குமஞ்சமெத்தையிலே
தங்கப்பொன்கட்டிலிலே தூங்குகின்றவேளையிலே
சொர்னப்பொன்கட்டிலிலே தூங்குகின்றவேளையிலே
மனையிற்பிறந்தபெண்ணுள் மாதுநல்லதம்பிறவி
தாலிதரித்துகொண்டு தன்புருஷன்வீடுவந்து
நாற்பத்தொருவருஷம் நலமாகவாழ்ந்திருந்து
ஏழுபிள்ளைபெற்றுமவள் இருக்கின்றவேளையிலே
பொல்லாதகாலமது சொல்லாமல்வந்ததுவாம்
பனிரண்டொருவருஷம் பஞ்சம்வந்துநேர்ந்ததுவாம்
தாலிதவிரமற்ற தங்கமெல்லாமுண்டபஞ்சம்
மங்கலியந்தான் தவிர மற்றதெல்லாமுண்டபஞ்சம்
தாங்கமுடியாமல் தாய்வீடுவருவதுமாய்
வழிகள்தெரியாமல் வனத்தில்புலம்புவதும்
காட்டிலேசத்தமிடக் காதிலேகேட்டதுபோல்
சொப்பனங்கண்டானே துரைமன்னன்நல்லதம்பி
ஒற்றைக்குரலுமென்ன ஒருத்தியுடசத்தமென்ன
அத்துவானகானகத்தில் அழுகிறுள்பெண்பெருமாள்
தூங்கியெழுந்திருந்தான் துய்யகனுக்கண்டதுபோல்
அலறியெழுந்திருந்தான் அல்லல்கனுக்கண்டதுபோல்
ஓங்கியெழுந்திருந்தான் ஓங்காரகோபமுடன்

நல்லதம்பி காட்டில் வேட்டைக்கு வந்து தங்கையைக் காணல்

கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைதானணிந்து
வாளுருவிதோளில்வைத்து மன்னர்எழுந்திருந்தான்
கருநாயுஞ்சங்கிலியும் கைக்கேற்ற அம்புகளும்
முள்ளிட்டவேலியெல்லாம் முருக்கம்புவில்லுகளும்
சள்ளிட்டநாயுடனே சகலகுணபாண்டியரும்
வெள்ளானைமேலேறி வேட்டைக்குவாரானங்கே
கருப்பானைமேலேறி காட்டுக்குவாரானங்கே
ஆனையின்மேலேறி அதிர்வேட்டைவாரானே
குதிரையின்மேலேறி குதிரைவேட்டைவாரானே

காட்டிலேவந்துமவன் கனவேட்டையாடையிலே
வேட்டைகளாடிக் களைத்திருக்குமந்தவேளையிலே
ஆனைகுதிரையெல்லாம் அங்கங்கேதானிறுத்தி
குதிரைப்பரிவாரங் கோடிதளந்தானிருத்தி
ஆணழகன்நல்லதம்பி அறியவெடுத்துரைப்பான்
ஆரடாசேவகரே அர்க்கார்கள்தம்பிமாரே
அத்துவானகானகத்தில் ஆரோபுலம்புவது
ஆரோபுலம்புவது அறியவேவேணுமென்று
பூவையழுகிறதைப் போய்ப்பார்க்கவேணுமென்று
அப்போதுநல்லதம்பி ஆணழகனேதுசொல்வான்
கருநாயைகைகொடுத்தான் காவலரைபோகவிட்டான்
செந்நாயைகைகொடுத்தான் சேவகரைபோகவிட்டான்
அருளருளுமென்னையா அப்படியேநல்லதென்று
நல்லதம்பிதன்னுடனே நாலுலக்ஷஞ்சேவகர்கள்
காலாளுஞ்சேவகருங் கடுகெனவேயோடிவந்து
நல்லதங்காளருகில்வந்து நலமாகஏதுசொல்வார்
கானகத்திலேபுலம்புகிற கட்டார்கருங்குயிலே
வனத்தில்புலம்புகிற வனக்கிளியேநீயாரு
ஒண்டித்தனிமையாக ஒருமையாய்த்தானிருந்து
காட்டில்புலம்புகிற காரணத்தைச்சொல்லுமென்றார்

சேவகர்கள் காட்டில் நல்லதங்காளைக் கண்டு அவர்கள் வரலாறு கேட்குதல்

எந்தவூர்தாயாரே எனக்கறியச்சொல்லுமென்றார்
காட்டிலேவந்துநீ கதறிப்புலம்புவதேன்
ஒண்டியாய்தானிருந்து ஓங்கியழுவதென்ன
வந்தவரலாற்றை வகையாகச்சொல்லுமென்றார்
அப்போதுநல்லதங்காள் அர்க்கார்க்கெடுத்துரைப்பாள்
ஊர்களும்பேர்களும் உங்களுக்குச்சொல்லணுமா
குலங்களைக்கேட்டு அண்ணேபெண்கொள்ளவந்தாயடா
என்பாடுசொல்லவென்றால் நிலப்பாடுசாயுமடா
என்பாடுசொன்னக்கால் எங்கும்நிலவெருக்கும்
பெண்பாடுசொல்லவென்றால் பொழுதுவிடியுமண்ணே
என்றுசொல்லிநல்லதங்காள்எடுத்துரைத்தாள்சேவகர்க்கு
அப்போதுகாவலர்கள் அரிவையர்க்குகூறலுற்றார்



சொல்லுமம்மாதாயாரே செவிகொடுத்துகேட்போமென்றார்
அப்போதுசேவகர்க்கு ஆரணங்குகூறலுற்றாள்
ஐந்துபிராயமண்ணே அறியாதநாளையிலே
தாயுந்தகப்பனும் செத்துமடிந்தபோது
குடும்பிதலையுடனே கட்டிவிட்டமாங்கலியம்
பாவாடைகட்டவொண்ணா பதந்தெரியாநாளையிலே
சிற்றாடைகட்டவொண்ணா சீர்தெரியாநாளையிலே
கட்டிக்கொடுத்தாரண்ணே கடுகவந்தமன்னவர்க்கு
ஒப்பிக்கொடுத்தாரண்ணே உண்டானகாவலர்க்கு
தாலிதரித்தமுதல் தாய்வீடுபோனதில்லை
மாலையிட்டநாள்முதலாய் மற்றொருநாள்வந்ததில்லை
நான்போனநாள்முதலாய் நல்லமழையுமில்லை
பன்னிரண்டாருவருஷம் பாரமழையுமில்லை
நாற்பத்தொருவருஷம் நன்றாகவாழ்ந்திருந்தேன்
வாழும்பெருமையிலே மக்களைபெற்றெடுத்தேன்
ஏழுபேர்மக்களை இன்பமாய்ப்பெற்றெடுத்தேன்
பெற்றேனேமக்களை பேருண்டாய்வாழ்ந்திருந்தேன்
வளர்த்தேனேமக்களை வாழ்வுண்டாய்வாழ்ந்திருந்தேன்
பொல்லாதகாலமென்ன சொல்லாமல்வந்ததங்கே
மரக்காலுருண்டபஞ்சம் மன்னவரைத்தோற்றபஞ்சம்
ஆழாக்குருண்டபஞ்சம் ஆளனைத்தோற்றபுஞ்சம்
தாலிபறிகொடுத்து தனிவழியேநின்றபஞ்சம்
கூரைப்பறிகொடுத்துக் கொழுநனைத்தோற்றபஞ்சம்
தாலிதவிரவைத்துத் தங்கமெல்லாம்விற்றுவுண்டேன்
இத்தனையும்விற்றுவுண்டேன் இருக்கமுடியவில்லை
தாங்கமுடியாமல் தாய்வீடுபோறேனென்றேன்
பொறுக்கமுடியாமல் பிறந்திடத்தேபோறேனென்றேன்
அண்டமுடியாமல் அண்ணன்வீடுபோறேனென்றேன்
என்றவுரைகேட்டு இயலானசேவகர்கள்
வந்ததேபோதுமம்மா மனக்கவலைதீர்ந்துவிடும்
சுகமாய்த்தாய்பேரைச் சொல்லுமம்மா ஆரணங்கே
உன்பேரைநாங்கள்கேட்க உத்தமியேசொல்லுமம்மா
அப்போதுநல்லதங்காள் அரிவையுங்கூறலுற்றாள்
தாய்பேருஇந்திராணி தகப்பன்பேர்ராமலிங்கம்

என்பேருநல்லதங்காள் என் அண்ணன்பேர்நல்லதம்பி
என்று அவளுரைக்க இயலானநல்லதம்பி

நல்லதம்பி தங்கையைக்கண்டு பரதவித்தல்

ஆனைவிட்டுத்தானும் அண்ணன்குதித்திறங்கி
குதிரைவிட்டுத்தானும் கொப்பெனவேதானிறங்கி
கட்டியழுதானே கடலிறைந்தபாவனைபோல்
தாவியழுதானே தங்கைமடிமீதில்
கட்டியழுதமன்னன் களைதெளிந்தபிற்பாடு
கண்ணாட்டிபெற்றதெல்லாம் கால்நடையாய்வந்ததென்ன
கால்நடையாயிங்குவரக் காரணமோஎன்பிறப்பே
ஆனையரிதாச்சோ ஆண்டிருந்தசீமையிலே
குதிரையரிதாச்சோ குடியிருந்தசீமையிலே
ஒட்டையரிதாச்சோ உன்னுடையசீமையிலே
பல்லக்குபஞ்சமோதான் பத்தினியாளேறிவர
பாங்கிமார்பஞ்சமோதான் பத்தினியேயுந்தனுக்கு
பாலால்குறைச்சலுண்டோ பாக்கியத்தால்தாழ்ச்சியுண்டோ
சாலால்குறைச்சலுண்டோ சம்பத்தால்தாழ்ச்சியுண்டோ
எத்தால்குறைச்சலம்மா என்பிறவியிங்குவர
ஓலைகிடையாதோ உத்தமனூர்சீமையிலே
ஓலையெழுதியல்லோ உத்தமியேயனுப்பிவைத்தால்
ஓலைகண்டநாழிகையில் ஓடிவந்துபாரேனே
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
தாயே-நீநினைத்தபிரகாரம் நான்வருவேன் தங்கையரே
கால்நடையாயிங்குவர காரணமோஎன்பிறப்பே
என்பிறப்பேவீட்டுக்கு ஏகுமம்மா நான்வருவேன்
பிள்ளைவிளையாட புள்ளிமான்கொண்டுவாரேன்
மைந்தன்விளையாட மான்வேட்டையாடிவாரேன்
தென்னண்டைவீதியிலே தேங்காய்குவிந்திருக்கும்
வடவண்டைவாடையிலே மாங்காய்குவிந்திருக்கும்
பிள்ளையும்நீயுமாய்ப் போடியம்மாதங்கையரே
உன்னைக்கண்டவுடனவளும் கடுகச்சமைத்திடுவாள்
வீட்டுக்குபோடியம்மா வேட்டையாடிவாரேனென்றூர்
அப்போதுநல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்

நல்லதம்பி நல்லதங்காளை தன்வீட்டுக்கு அனுப்புதல்

அண்ணுடா அண்ணுடா ஆணழகா சொல்லுகிறேன்
வாசலறியேனப்பா வளவுகுறிப்பறியேன்
கோயிலறியேனப்பா குறிப்பறியேன்கொற்றவனே
அடையாளஞ்சொல்லுமென்று ளரிவையிளங்கொடியும்
மூன்றுகதவிருக்கும் மோதாங்குப்பூட்டிருக்கும்
புறக்கடைவாசலிலே பொன்னின்கதவிருக்கும்
தலைக்கடைவாசலிலே தங்கக்கதவிருக்கும்
நாலுகதவிருக்கும் நாதாங்கிபூட்டிருக்கும்
காராம்பசுவுமுண்டு கட்டழகிவாசலிலே
காட்டானைவாசலிலே கட்டியிருக்குதம்மா
அதுவேயடையாளம் அம்மணியேபோவென்றான்
உத்தமியேவீட்டுக்குப்போ உன்பிறகேநான்வருவேன்
போடியம்மாதங்கையரே புத்திகளைசொல்கிறேன்
அப்போதுநல்லதங்காள் அரிவையுமேதுசொல்வாள்
அண்ணுடா அண்ணுடா ஆணழகாசொல்லுகிறேன்
மாதாயிருந்தாலும் வாவென்றுதானழைப்பாள்
தாயற்றபோதேயண்ணு தயவற்றுப்போகலையோ
அப்பனற்றபோதேயண்ணு ஆதரவுபோகலையோ
மூளியலங்காரி மூருகுழாளண்ணியம்மாள்
வாவென்றழைப்பாளோ வரிசையிட்டுப்பார்ப்பாளோ
ஏனென்றுகேட்பாளோ ஏறமுகம்பார்ப்பாளோ
அண்ணனருகிருந்தா லருமைகள்மெத்தவுண்டு
என்பிறப்பேநீயிருந்தால் எனக்குமெத்தசொந்தமுண்டு
நீயில்லாமாளிகையில் நான்போகலாகாது
அண்ணனில்லாவீட்டில் அடியெடுத்துவையேனென்றாள்
அந்தவுரைகேட்டு ஆணழகனேதுசொல்வான்
தாயேயுனைவளர்த்த தாதியிருக்கலையா
அண்ணனுடபெண்சாதி ஆத்தாளிருக்கலையோ
உடற்பிறப்பேவீட்டுக்குப்போ உன்பிறகேநான்வருவேன்
போடியம்மாதங்கையரே புத்திகளைச்சொல்லுகிறேன்
அப்போதுநல்லதங்காள் அரிவைதுரிதமுடன்
நல்லதென்றுசொல்லி நடந்தாளேநாயகியாள்
காடுமலைதாண்டி கடுகவேநடக்கலுற்றாள்

பிள்ளைகளைப்பின்னடத்தி போகிறாள்நடுத்தெருவே
மைந்தர்களைப்பின்னடத்தி போகிறாள்கடைத்தெருவே

மூளியலங்காரி நல்லதங்காள் வருவதைக்கண்டு தன் ஆபரணமெல்லாம் பத்திரப்படுத்தல்

அப்போது நல்லதம்பி ஆணழகன்தேவியரும்
உப்பரிகைமீதேறி உலாவுகையில்கண்டுவிட்டாள்
கண்டாளேகண்டாளே கண்ணுட்டிநாத்தியரை
கண்டுயிடிவிழுந்தாள் கட்டாணியப்போது
பார்த்துயிடிவிழுந்தாள் பாவியந்தச்சண்டாளி
தாதிகளைமூப்பிகளைத் தந்திரமாய்த்தானழைத்து
ஆரடிதாதிகளே அரைக்ஷணத்தில்நீங்களிப்போ
தென்னண்டைமூலைகளில் தேரோடும்வீதியிலே
வடவண்டைவீதியிலே வருகிறவளாரடிதான்
வருகிறவளாரடிதான் மாதரேபாருமென்றாள்
அப்போது தாதியர்க ளரிவையர்களோடிவந்து
தெருவீதிதன்னில்வந்து சேடியரும்பார்க்கலுற்றார்
பார்த்துமேயோடிவந்து பாவையர்களேதுரைப்பார்
மனையிற்பிறந்தபெண்ணு மகாராசிவாராளம்மா
அப்போ-மூளியலங்காரி மூதேவியேதுரைப்பாள்
இவளிருக்குஞ்சீமையிலே இக்காலங்கருப்புமுண்டு
நானிருக்குஞ்சீமையிலே நாயகியேயேன்வருவாள்
சீமைகளைப்பூமிகளைச் சீர்கொள்ளவாராளோ
என்-வாழ்வைப்பறிக்கவல்லோ வாராளேசக்களத்தி
காடுகரைகளெல்லாம் கைக்கொள்ளவாராளோடி
என்குடிக்குத்தீம்புவைக்க எங்கிருந்துவாராளோடி
பொன்னுபரணமெல்லாம் போட்டழிக்கவாராளோடி
தங்கப்பணிதியெல்லாம் தான்தரிக்கவாராளோடி
தென்னண்டைகண்டீரானல் தெருக்கதவைச்சாற்றிவிடு
வடவண்டைகண்டீரானல் வலக்கதவைச்சாற்றிவிடு
மூளியலங்காரி மூதேவிசொற்படிக்கு
தாதிகளப்போது சாத்திக்கதவடைத்தார்
இருத்திக்கதவடைத்தார் ஈரமண்போட்டடைத்தார்
பானையில்சாதமெல்லாம் பதனப்படுத்திவிட்டாள்
மூளியலங்காரி மூதேவியேதுசெய்தாள்

பட்டைகழற்றிவைத்தாள் பாடகத்தைவாங்கிவைத்தாள்
சேலைகளை நுமவள் சிலுவாணப்பெட்டியில்வைத்தாள்
இட்டபணிதியெல்லாம் பெட்டியில்கழற்றிவைத்தாள்
பழந்துணிக்கந்தைகளை பாவியவள்கட்டிக்கொண்டாள்
முகத்திலேபற்றுமிட்டு தரையிலேபள்ளிகொண்டாள்
வாசற்படியெதிரே மங்கையரும்பள்ளிகொண்டாள்

நல்லதங்காள் அண்ணன் வீடு சேருதல்

அப்போதுநல்லதங்காள் அரிவையிளங்கொடியும்
நாத்தினர் தன்மனையில் நாயகியும்வந்துநின்று
கதவையுந்தட்டியவள் காரிழைநாயகியும்
நின்ருளொருசாமம் நேரிழையாளப்போது
நான்-பேசாத அண்ணியுடன் பேசவேண்டுமென்று
அப்போதுநல்லதங்காள் அரிவையிளங்கொடியும்
அண்ணியரே அண்ணியரே அண்ணனுடதேவியரே
அண்ணனரண்மனையை ஆளவந்தமதனியரே
அடி-காலுக்கடுக்குதண்ணி கச்சட்டைநோகுதண்ணி
நின்றகால்சோருதடி நிலையுங்கடுக்குதண்ணி
கதவைத்திறக்காயோ கண்ணுட்டியண்ணியரே
என்றுமவள்கூறி இளங்கொடியாள்நிற்கையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
எண்ணுதயெண்ணம் எண்ணியவள்பள்ளிகொண்டாள்
ஏழுபிள்ளைபெற்றவள் இளங்கொடியாளேதுசெய்வாள்
கதவருகில்வந்துநின்று கடவுளைக்கைதொழுது
அண்ணி-பத்தரையுங்கட்டியே பாங்காய்வளர்த்தபிள்ளை
எட்டரையுங்கட்டியல்லோ இயல்பாய்வளர்த்தபிள்ளை
பாலமுதுசோறுசெய்து பங்கிட்டுநான்வளர்த்தேன்
நெய்யமுதுசோறுசெய்து நேர்த்தியாய்வளர்த்தபிள்ளை
கத்திரிக்காய்போலேயண்ணி கதறுதடிபாலரெல்லாம்
வெள்ளரிக்காய்போலேயண்ணி வெம்புதடிபாலரெல்லாம்
தண்ணீர்தண்ணீரென்றுசொல்லி தவிக்குதடிபாலரெல்லாம்
அன்னமென்றுசொல்லி அலையுதடிமக்களெல்லாம்
புத்திரர்பசியாறப் புத்திகளைசொல்லுமண்ணி
மனதுயிரங்கலையோ மாபாவியண்ணியென்ருள்
இரங்குந்திருமுகத்தை ஏறெடுத்துப்பார்க்கவில்லை



77066

மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மைந்தர்பசியாற வார்த்தைகளைச்சொல்லுமண்ணி
என்னைப்பார்க்காவிட்டால் என்பிள்ளைகளைபாருமண்ணி
முத்தானவாய்திறந்து உத்தாரஞ்சொல்லுமண்ணி
வாயைத்திறந்தாக்கால் வாய்முத்துசிந்துமடி
தாளைத்திறந்தாக்கால் தங்கமுதிருமடி
தங்கமுதிர்ந்துமண்ணி தடுமாறிப்போருயடி
எந்நேரம்மட்டுமண்ணி இதம்பாடிநிற்பேனன்
தாளைத்திறந்தாக்கால் தங்கமுதிருமோதான்
வாயைத்திறந்துநீயும் மறுவார்த்தைசொல்லுமண்ணி
அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இரங்கும்திருமுகத்தை ஏறெடுத்துபார்க்கவில்லை
கவிழ்ந்திருந்தமுகத்தை கண்ணெடுத்துப்பார்க்கவில்லை

நல்லதங்காள் சாபத்தால் கதவு திறக்கப்பட்டது

அப்போதுநல்லதங்காள் ஆரணங்குயேதுசெய்வாள்
பத்தினியும்நானானால் பத்தாவுமவரானால்
உத்தமியும்நானானால் ஒருநூல்கழுத்தியானால்
தாள்பூட்டுஞ்சங்கிலியுந் தானேதிறக்கவேண்டும்
தானேதிறக்கவேண்டும் தாய்வீட்டுபொற்கதவு
பத்தினியாள்வாக்கு பலித்ததுதானப்போது
பத்தினியாள்சொல்லினிலே பளிச்சென்த்திறந்திடுமாம்
உத்தமியாள்சொல்லினிலே பளிச்செனத்திறந்திடுமாம்
உட்கட்டுகதவுகள்தா னுடனேதிறந்ததப்போ
கதவுதிறந்தவுடன் கட்டழகிநல்லதங்காள்
முன்வைத்தகாலையங்கே பின்வைத்துதா னுழைத்தாள்
ஆக்குமடப்பள்ளியும் அடங்கலும்சுற்றிவந்தாள்
எங்கேசுற்றிப்பார்த்தாலும் ஏதொருபண்டமில்லை
மூளியலங்காரி மூதேவிவீற்றிருக்கும்
கூடத்திலேகனிகள் கொட்டியிருக்குதங்கே
அண்ணியற்குமுன்வந்து அருங்கிளியாள்நிற்கையிலே
பெருமையாய்நல்லதங்காள் பெற்றெடுத்தபிள்ளைகளில்
அதிலேஒருபிள்ளை அக்கனியிலொன்றெடுக்க
மற்றுமொருபிள்ளை மாங்காயெடுத்திடுமாம்
தென்னண்டையோடி தேங்காயெடுத்திடுமாம்

0-18GPU,N

அப்போதுகண்டாளே அண்ணனுடையதேவியாரும்
மூளியலங்காரி மூதேவிச்சண்டாளி
திட்டென்றெழுந்திருந்து தீவிரமாய்கைமுறித்தாள்
ஓட்டமாய்ஓடிவந்து ஓரறைதான்கொடுத்தாள்
மாங்காயைத்தான்திருகி மாங்காயுடன்போட்டாள்
தேங்காயைத்தான்திருகி தேங்காயுடன்போட்டாள்
ஆயிரம்தேங்காயிலே அழுகல்காயைக்கொடுத்தாள்
அப்போதுநல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பாள்
கண்ணாளன்பெற்றெடுத்த கற்கண்டேசர்க்கரையே
என்கொழுநன்பெற்றெடுத்த இரத்தினசிகாமணியே
காலமழையில்லாமல் கழனிவிளையாமல்
தேதிமழையில்மாமல் செந்நெல்விளையா மல்
பயிர்கள்விளையாமல் பஞ்சங்கள்வந்ததினல்
பத்தாசொற்கேளாமல் படுபாவிசீமைவந்தேன்
மாமனதுமாளிகையில் மாங்காயைத்தின்ருதீர்
தேங்காயைத்தின்ருதீர் சிறுவரென்மைந்தர்களே
மாங்காயும்தேங்காயும் மக்களேதின்ருதீர்
வாருங்கள்மக்களென்று மடிமேல்தூக்கிவைத்தாள்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நல்லதங்காள்தனக்கும் நாயகியாள்பிள்ளைகட்கும்
பன்னிரண்டுவருஷம் பஞ்சடைந்தகேழ்வரகை
சில்லியைந்துபானையிலே இல்லையென்றுலைவைத்தாள்
ஒட்டைத்திருகையெடுத் தொன்றிரண்டாய்மாவாக்கி
வாசலிலேநிற்குமந்த வாழைமரந்தான்பிளந்து
ஈனுதவாழை யிளவாழைத்தண்டொடித்து
வாழைமரம்பிளந்து வைத்தாளடுப்பிலேதான்
ஊதுகிருள்பாவி ஒருவாய்புகைகிளம்ப
சிந்திருள்மூக்கையங்கே திருக்கண்சிவந்திடவே
அப்போதுநல்லதங்காள் ஆரணங்குகூறலுற்ருள்
நம்முடைய அண்ணியர்க்கு நம்மால்வருத்தமென்ன
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இந்தவருத்தங்கள் இப்படியாய்நேர்வதென்ன
என்றுசொல்லிநல்லதங்காள் எடுத்துரைத்தாளக்கினிக்கு
கிரான்-பத்ட்னியுமானல் பற்றியெரியவேண்டும்

உத்தமியுமானல் ஓங்கியெரியவேண்டும்
கூழுங்கொதிக்கவேண்டும் குழந்தைகள்பசியாறவேண்டும்
என்று-பத்தினியாள்சொல்லையிலே பற்றியெரியுதங்கே
கொம்பனையாள்சொல்லையிலே கூழுங்கொதித்திடுமாம்
அப்போது நல்லதங்கா ளண்ணியருக்கேதுரைப்பாள்
காய்க்கிறகூழானலும் கட்டழகிவார்க்காயோ
கொதிக்கிறகூழதனைக் கொடுப்பாயோமதனியென்றாள்
அப்போமூளியலங்காரி மூதேவியேதுரைப்பாள்
தைப்பிறைகண்டேனல் தரையிலிறக்குவண்டி
மாசிப்பிறைகண்டேனல் முன்னலிறக்குவண்டி
மைந்தருக்கும்முந்தனுக்கும் வார்ப்பேண்டிகூழதனை
இருந்தாலிருமென்றாள் நடந்தால்நடவுமென்றாள்
அந்தவுரைகேட்டு அழகுள்ளநல்லதங்காள்
மங்கைமனதுநொந்து மதிமுகம்வேறுபட்டு
உள்ளமனமெரிய உத்தமியாளேதுசொல்வாள்
குழந்தைகுடிக்கக்கொஞ்சம் கூழுக்குபஞ்சமோதான்
மக்கள்குடிக்கக்கூழு மண்டலத்திற்கிட்டாதோ
இரக்கப்புறப்பட்டால் எங்கேயும்கிட்டாதோ
வாங்களடாமக்களா வரிசையாய்என்பிறகே
வைத்துவிளையாட மச்சினிமார்மெத்தவுண்டு
கூடிவிளையாட குழந்தைமார்மெத்தவுண்டு
ஒப்பாரியுறன்முறையா ருண்டுபலபேர்கள்
பாட்டன்வீடுபோய்நாம் பாலமிர்தமுண்ணலாமே
தாய்வீடுபோனலும் தயிர்சாதமுண்ணலாமே
அண்ணன்வீடுபோனல்நாம் ஆலித்திருக்கலாமே
வாங்களடாமக்களா வரிசையாயென்பிறகே
அண்டைவீட்டுபெண்களா அசலாத்து அப்பியரே
தண்ணீர்க்குப்போறதொரு தாய்மாரேபெண்டுகளா
என்-அண்ணியார்செய்ததொரு அனியாயங்கேட்டீர்களா
மதனியார்செய்ததொரு மரியாதைப்பார்த்தீர்களா
அண்ணனர்வந்தபின்பு அறிந்ததைசொல்லுமென்றாள்
தமையனர்வந்தபின்பு தாய்மாரேசொல்லுமென்றாள்
அந்தசொற்கேட்டிருந்த அரிவைமாரெல்லோரும்
நல்லதங்காளைப்பார்த்து நலமாகவேதுசொல்வார்
எந்தனுடவீட்டுக் கெழுந்துவா நல்லதங்காள்

அவரவர்கள்வீட்டுக் கழைத்தார்களெல்லோரும்
ஏண்டியம்மாதங்கையரே இத்தனைகோபமென்ன
பச்சரிசிகுத்திதாரேம் பாலுங்கறந்துதாரேம்
பாலரும்நீயுமாய்ப் பசியாறிப்போங்களென்ருர்
அப்போதுநல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்
அண்டைவீட்டுத்தண்ணீர் யாம்குடியோம் அப்பியரே
அசல்வீட்டுத்தண்ணீர் யாமருந்தோம் அப்பியரே
அண்ணனுர்வந்தபின்பு அருஞ்சேதிசொல்லுமென்ருள்
அப்போதுபெண்களெல்லா மதிகமாயெடுத்துரைப்பார்
ஏண்டியம்மாதங்கையரே இத்தனைகோபமென்ன

நல்லதங்காள் காட்டுக்குப் போகும்போது கணையாழி மோதிரமும் ஆவாரந்தழையும் அடையாளமாகப் போட்டு வைத்தல்

கோபம்பொறுக்காமல் கொல்லைதான்வழிநடந்தாள்
ஆவாரஞ்செடியொடித்து அடையாளம்போடலுற்ருள்
கொன்றைதழையொடித்து கொடிவழியேபோடலுற்ருள்
கணையாழிமோதிரத்தை கழட்டியேபோடலுற்ருள்
அத்துவானகானகத்தில் ஆரணங்குபோய்நடந்தாள்
காட்டானைவனத்திலே கன்னிநடக்கலுற்ருள்
வாங்களடாமக்களா வரிசையாய்யென்பிறகே
பாட்டனுர்வைத்ததொரு பழஞ்சோலைபார்த்தழுதாள்
ஆத்தாளும்வைத்ததொரு அழுகுசோலைபார்த்தழுதாள்
குடங்கொண்டுநீர்சொரிந்தேன் கொம்புகளாயப்போது
பாவிவருவேனென்று பாலைப்பூர்த்திர்களோ
தோஷிவருவேனென்று துக்கமற்றுகாய்த்திர்களோ
வாருங்கள்மக்களா வரிசையாயென்பிறகே
என்றுசொல்லிநல்லதங்காள் இயலாயுரைக்கையிலே
தண்ணீரென்றுசொல்லி தவிக்கிறதுபாலரெல்லாம்
அன்னமென்றுசொல்லி அலையுதுபாலரெல்லாம்
காரைப்பழம்பறித்து இட்டாளேமக்களுக்கு
சூரைப்பழம்பறித்துக் கொடுத்தாளேமக்களுக்கு
தொரட்டிப்பழம்பறித்து தூங்காதேமக்களென்ருள்
கானலுரைக்குதென்று கையால்குடைபிடித்தாள்
என்னருமைமக்களா என்பிறகேவாருமென்ருள்
அந்தவனந்தாண்டி அப்பாலேபோகையிலே

அப்போது நல்லதங்கா ளரிவையருமெண்ணுற்றாள்
உற்றுநினைத்தாளே ஒருநொடியோசனையை
பத்தாவின்வார்த்தைதள்ளி பதறிநடந்தோமே
கணவனிடவார்த்தையது கடந்துநடந்தோமே
எங்கேயோவானம் இடித்ததென்றுநானிருந்தேன்
தப்பாதேவானம் தலையிலடித்ததென்றாள்
ஆகாயவானமது அதிரவிழுந்ததுவே
எண்ணறவாசித்து எழுத்தறக்கற்றாலும்
பெண்புத்தியாலேயல்லோ பிழைவந்துநேர்ந்ததென்றாள்
சதிகாரப்பாவியைநான் பிறப்பென்றுநம்பிவந்தேன்
பழிகார அண்ணனைநான் பலமென்றுநம்பிவந்தேன்
இந்தவுடலோடே இனியிருப்போமானால்
பலருஞ்சிரிப்பார்கள் சரியொத்தோரேசுவார்கள்
சதுரோர்சிரிப்பார்கள் சரியொத்தோரேசுவார்கள்
இந்தவுடலோடே இனியிருக்கலாகாது
மாண்டுமடிவோமென்று மங்கைமனந்தளர்ந்து
செத்துமடிவோமென்று சேயிழையாள்மனந்துணிந்தாள்
வாங்களடாமக்களா வரிசையாயென்பின்னே
என்றுசொல்லிநல்லதங்கா ளியலாகவழிநடந்தாள்
அவள்-அந்தவனந்தாண்டி அப்புறத்தேபோகலுற்றாள்
வேறேயொருகானகத்தில் மெலியரும்வந்துநின்று
கானகத்தில்பலசிறுவர் காராவைமேய்த்திருந்தார்
மாடுமேய்க்கும்பிள்ளைகட்கு மகாராசியேதுசொல்வாள்

நல்லதங்காள் இடையரைப் பாழுங் கிணறிருக்குமிடம் கேட்கல்

மாடுமேய்க்கும்பிள்ளைகளா அறியாதபாலகரே
ஆடுமேய்க்கும்பிள்ளைகளா மாட்டாஞ்சிறுதம்பியரே
பச்சரிசிநான்தாரேன் பால்தாரேனுங்களுக்கு
கச்சாயம்நான்தாரேன் கண்ணாட்டிமக்களென்றாள்
பாழுங்கிணறென்று பார்க்கிலையோதம்பியரே
இருண்டகிணறென்று காண்கிலையேயெந்தனுக்கு
அப்போதுமாட்டிடைய ரறிவாளரேதுசொல்வார்
பாழுங்கிணறுனக்கேன் பத்தினியேசொல்லுமென்றார்
இருண்டகிணறுனக்கேன் என்தாயேசொல்லுமென்றார்

அப்போது நல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்
தண்ணீரின் தாகமப்பா தற்காலமிப்போது
தண்ணீர்குடிக்கவேணும் தாகவிடாய்தீரவேணும்
கட்டமுதுண்ணவேணும் களையாறவேணுமென்றார்
அப்போது ஆட்டிடைய ரரிவையர்க்கேதுசெல்வார்
அறுகுபடர்ந்திருக்கும் ஆழமுள்ளபாங்கிணறு
கோவைபடர்ந்திருக்கும் கொடிதானபாங்கிணறு
எதிரேயிருக்குதம்மா ஏற்றமுள்ளபாங்கிணறு
என்றுமேசொன்னபின்பு ஏந்திழைநல்லதங்காள்
அந்தவிடந்தாண்டி அரிவையும்வாராளே
பாழுங்கிணற்றருகே பத்தினியாள்வந்துநின்று
இருண்டகிணற்றருகே இளங்கொடியாள்வந்துநின்று
மைந்தரைப்பார்த்துமல்லோ மங்கையருமேதுரைப்பாள்
பாழுங்கிணற்றைப்பார்த்துப் பாலகரே நீர்பயந்து
இருண்டகிணற்றிற்றள்ள எடுத்துவளர்த்திட்டேனோ
மாளவோவிங்குவந்தோம் மாபாவிபட்டணத்தில்
மன்னவர்கேட்டுவிட்டால் மாண்டுமடிந்திடுவார்
கொற்றவர்கேட்டாக்கால் கூடிமடிந்திடுவார்
அப்போது நல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
அண்ணன்கொடுத்ததொரு பட்டாடைமடித்துவைத்தாள்
அண்ணிகொடுத்ததொரு தேங்காயைமேலேவைத்தாள்
பாலூட்டும்பாலாடையைப் பத்தினியாளங்கேவைத்தாள்
மோர்குடிக்கும்பாத்திரத்தை முருகுழலாளங்கேவைத்தாள்
தாமரையிலைகிள்ளித் தாலிகழற்றிவைத்தாள்
மாவிலைகிள்ளியல்லோ மாங்கிலியம்வாங்கிவைத்தாள்
அப்போது நல்லதங்கா ளரிவையுமேதுசொல்வாள்
கானகத்திலேவளர்ந்து கல்லாய்ச்சமையவேண்டும்
பத்தினியாள்சொல்லையிலே பாராங்கல்லாகினதாம்
உத்தமியாள்சொல்லையிலே ஒருகல்லாய்நின்றதங்கே

நல்லதங்காளும் பிள்ளைகளும் கிணற்றில் விழுந்திறத்தல்

அப்போது நல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
மாளுகிறேனென்றுசொல்லி மலையேறிதெண்டனிட்டாள்
சுத்திவலம்வந்து சூரியனைத்தெண்டனிட்டாள்

தெண்டனிட்டபிற்பாடு தெரிவையிளங்கொடியும்
ஒவ்வொருமக்களாய்த் தள்ளினாள்கங்கையிலே
அப்போ-தாய்க்குத்தலைமகனும் தானாகவோடினதாம்
ஓடியதலைமகனும் உத்தமிக்கேதுரைப்பான்
தாயேநீநல்லதங்கா தயவாகக்கேளுமம்மா
தப்பிப்பிழைத்திடுவேன் தாயார்பேர்சொல்லுகிறேன்
ஓடிப்பிழைத்திடுவேன் உன்பேரைச்சொல்லுகிறேன்
எள்ளுந்தண்ணீருமது இறைத்துவருவேனம்மா
திங்கள் திவசங்கள் பண்ணிவருவேனம்மா
என்னைத்தான்கொல்லாதே என்னைப்பெற்றமாதவே
ஒருபிள்ளைபெற்று உலகத்தையாளலையோ
ஏழுபிள்ளைபெற்றுமல்லோ ஏழைமதியாளுயம்மா
மாடுமேய்த்துகஞ்சி குடிப்பேனேமாதாவே
என்னைத்தான் கொல்லவேண்டாம் என்னைப்பெற்றமாதாவே
போனதெல்லாம்போகட்டும் இருவர்பிழைத்திடுவோம்
அப்போதுநல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பாள்
அறுவர்கள்தன்னுயிர்க்கும் அதிகமோநம்முயிர்தான்
நாம்-ஓடிப்பிழைத்தாலும் ஒருவரில்லையென்பார்கள்
தப்பிப்பிழைத்தாலும் தாயற்றபிள்ளையென்பார்
கண்டார்சிரிப்பார்கள் காசினியோரேசுவார்கள்
வாடாயப்பாயென்மகனே கூடயிறந்திடுவோம்
என்றுமேநல்லதங்கா ளிடையரைத்தானழைத்து
கூடிப்பிடியுமென்றாள் கொற்றவனார்தன்மகனை
ஓடிப்பிடியுமென்றாள் உத்தமியாள்தன்மகனை
கொச்சியிடையரெல்லாம் ஓடிப்பிடித்துவந்தார்
வந்ததோர்பிள்ளைதன்னை தள்ளினாள்கங்கையிலே
தள்ளினபிற்பாடு தனியாகநல்லதங்காள்
பார்ப்பாருடையுடுத்திப் பத்தினியாள்நல்லதங்காள்
தானுஞ்சலியாமல் தண்ணீரில்போய்விழுந்தாள்
அப்போதுகங்காதேவி மூன்றுபிழைபொறுத்தாள்
மூன்றுபிழைபொறுத்து முக்காலும்பொங்கிவிட்டாள்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
தண்ணீர்தவக்கைளப்போல் தானாய்மிதக்கலுற்றாள்
பச்சைக்கிளிபோல் பறக்கிறாள்பாழுங்கிணற்றில்
அவளுடையகூந்தலது அறுபதுபாகமது

அறுபதுபாககூந்த லலையுதுகங்கையிலே
இப்படியாக இவளிருக்கும்வேளையிலே
வேட்டைக்குப்போயிருந்த விருதுள்ளராஜனுக்கு
தோள்கள்துடிக்கிறதும் துர்க்குறிநேருவதும்
இயலானகண்களுக்கு ஈவந்தடிக்கிறதும்
ஆடுந்தொடைகளெல்லா மப்போதுடித்திடுமாம்
பட்டத்துயானையங்கே பதறிவிழுந்திடுமாம்
யானையுஞ்சேனையும் அத்தனையும்தான்மடிந்து
குதிரைபரிவாரம் கோடிதளம்தானிறந்து
இப்படியாக இடறுகள்நேர்ந்ததங்கே
ஒற்றைநாய்தன்னுடனே உளம்நைந்துவீடுசேர்ந்தான்

மூளியலங்காரி தன்கணவனுக்குக் கள்ள உபசாணை செய்தல்

அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
பத்தாவுக்குபசாணை பைங்கிளியும்செய்யலுற்றாள்
கெண்டியில்தண்ணீரும் கொண்டுவந்தாள்பன்னீரும்
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
சரணஞ்சரணமென்று சாய்த்தாள்திருமுடியை
பாதஞ்சரணமென்று பத்தாவைத்தெண்டனிட்டாள்
தண்ணீர்குடியும்பத்தா தாகவிடாய்கொள்ளும்பத்தா
வெந்நீர்குடியும்பத்தா விடாயாற்றிக்கொள்ளுமென்றாள்
அப்போதுநல்லதம்பி அவளுக்கெடுத்துரைப்பான்
மூளியலங்காரி மூதேவிக்கெடுத்துரைப்பான்
தண்ணீர்குடிப்பேண்டி விடாயாற்றிக்கொள்ளுவேனான்
நல்லதென்னுடன்பிறந்த நல்லதங்காள்நாயகியை
காட்டிலேகண்டுபெண்ணே வீட்டுக்கனுப்பிவைத்தேன்
ஏழுபிள்ளைநல்லதங்கா ளிங்குவந்தாளெங்கேயென்றான்
என்பிறப்புநல்லதங்கா ளிங்குவந்தாளெங்கேயடி
என்றுரைக்கநல்லதம்பி எடுத்துரைப்பாள்நாயகியும்
கண்டதுகண்டாற்போல் கணவர்க்கெடுத்துரைப்பாள்
வந்தாளிருந்தாள்பத்தா வண்ணப்பாய்போட்டேன்பத்தா
மக்களுடன்வந்த வரவைக்கண்டுநானுமப்போ
கால்கண்டநேரத்தில் கடுகவுலையும்வைத்தேன்
முனையறியாப்பச்சரிசிதனை மலைபோலேநான்சமைத்தேன்
வாழைக்காய்கொய்தேன் வழுதலங்காய்காம்பரிந்தேன்

ஈரப்பலாக்காயை இருமுள்ளும்போக்கடித்தேன்
கத்தரிக்காய்கொய்தேன் கருணைக்குழம்புவைத்தேன்
முள்ளிக்காய்கொய்தேன் முருங்கக்காய்நான்சமைத்தேன்
பச்சென்றகீரையொன்று பசுவெண்ணெய்போல்சமைத்
பத்துவிதக்கறியும் பாங்கானபச்சடியும் [தேன்
எட்டுவிதக்கறியும் இயலானபோஜனமும்
அடுக்கடுக்காய்கறிக ளன்பாகநான்சமைத்தேன்
உன்னுடன்தான்பிறந்த உத்தமியாள்நாயகியும்
ஏழுபிள்ளை தனக்கும் இளங்கொடியாள்நாயகியும்
பெரியகலமெடுத்தேன் பிள்ளைகட்குசோறுமிட்டேன்
சின்னகலமெடுத்தேன் சிற்றடிக்குச்சோறுமிட்டேன்
சூத்திக்கறியும்வைத்து சொம்புதயிர்முன்னேவைத்தேன்
அள்ளிப்பருப்புமிட்டு அதுகண்டுநெய்சொரிந்தேன்
உண்ணுங்களென்று உபசரணைசெய்துநின்றேன்
தின்னுங்களென்றுசொல்லி தெருவாசல்காத்திருந்தேன்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
உண்டுபசியாறி உட்கட்டில்வீற்றிருந்தாள்
அரிபிளவுவெற்றிலையும் அள்ளியேநான்கொடுத்தேன்
தாம்பூலந்தான்தரித்து தயவாகநல்லதங்காள்
சொக்கட்டான்சதுரங்கந் தோகையருந்தானுடி
காற்றடிக்கும்மண்டபத்தில் காரிழையாள்வீற்றிருந்தாள்
தூக்கம்வருகுதென்றாள் துன்னீலங்கண்ணுளும்
பாங்கியரைத்தானழைத்து பள்ளியறைசோடியென்றேன்
தாமக்கருங்குழலார் தாதியர்களோடிவந்து
சொர்னப்பொன்கட்டிலிட்டுச் சோடித்தார்தாதியர்கள்
தங்கப்பொன்கட்டிலின்மேல் தகுந்தமல்லிகைப்பூசொரிந்
பளிங்குமாமண்டபத்தில் பாங்கிமார்விரித்துதறி [தார்
கெண்டிகையும்பூமடலும் கொண்டுவந்துவைத்தார்கள்
பள்ளிகொள்ளுமென்று பாவையற்குதெண்டனிட்டேன்
அப்போதுநல்லதங்கா ளரிவையெழுந்திருந்து
பஞ்சணைமெத்தையிலே பள்ளிகொண்டாள் பாவையரும்
சாதிமணிக்கவுரி சந்தனத்தாலூதுவத்தி
கோவமணிக்கவுரி குங்குமத்தாலூதுவத்தி
வீசினார்தாதியர்கள் மெல்லியர்க்கிருபுறமும்
கவரிபரிமாறக் கட்டழகி தூங்கினளே

தூங்கினாள்மூன் றுசாமம் துன்னீலங்கண்ணாளும்
பொழுதுசரிந்ததென்று பொற்கொடியைநானெழுப்ப
தூங்கிமிகத்தெளிந்து துரிதமுடன்நல்லதங்காள்
என்னையேதானோக்கி இளங்கொடியாளேதுசொல்வாள்
அண்ணியரே அண்ணியரே அண்ணனுடதேவியரே
அண்ணனரண்மனையை ஆளவந்தமதனியரே
நாத்தினரே நாத்தினரே நலமாகஎந்தனுக்கு
உடுக்கவேசேலையொன் றுத் தமியாள்தானுரைத்தாள்
அப்போதுநான்தானும் அரிவையிளங்கொடிக்கு
உனக்கொருசேலையென இருசேலைநான்கொடுத்தேன்
மூன் றுவர்னசேலையது மூன்றெடுத்துநான்கொடுத்தேன்
பச்சைவர்னசேலையது பத்தாவேநான்கொடுத்தேன்
அழகுமணிகொடுத்தேன் ஆபரணம்நான்கொடுத்தேன்
தக்கபணிகொடுத்தேன் தகுந்தபொருள்கொடுத்தேன்
செலவுக்கோராயிரம்பொன் சிறப்பாகநான்கொடுத்தேன்
பாலர்விளையாட பம்பரங்கள்நான்கொடுத்தேன்
சிறுவர்விளையாட சிங்காரதேர்கொடுத்தேன்
மாமிவீடுபோவதற்கு மச்சுரதங்கேட்டாள்
ஆளன்வீடுபோவதற்கு அழகுரதம்கேட்டாள்
அத்தனையும்நான்கொடுத்தேன் அன்பானநாத்தியர்க்கு
கேட்டதெல்லாம் நான்கொடுத்தேன் கிளிமொழிமாதருக்கு
பாவையிளங்கொடியாள் பத்தினியாள்பாலரெல்லாம்
பாப்பாரவீதியெல்லாம் பந்தாடிவந்தார்கள்
செட்டித்தெருவெல்லாம் செண்டாடிவந்தார்கள்
நீ—களைத்துவருவாயென்று கடுகுடமெடுத்தேன்
தங்கக்குடமெடுத்து தண்ணீர்க்குப்போயிருந்தேன்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
இருந்தாளெழுந்திருந்தா ளின்னவிடம்நானறியேன்
போனவிடம்நானறியேன் போயிருக்குந்தாவறியேன்
பந்தம்பிடித்துபத்தா பலதெருவும்தேடிவந்தேன்
காடெல்லாம்தேடிவந்தேன் காலிரண்டும்நோகுதிப்போ
ஊரெல்லாம்தேடிவந்தேன் உடம்பெல்லாம்நோகுதிப்போ
ஆணலழகுமன்னா ஆளனேயெந்தனுக்கு
ஒருபானைஜலம்வைத்துத் தருவாயோயெந்தனுக்கு
என்றுசொல்லக்கேட்டு மன்னன் இயலாகநல்லதம்பி

ஆங்காரக்கோபமுடன் ஆனந்தவாழ்மார்பன்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இந்தமர்மமெல்லாம் எனக்குத்தெரியவரும்
என்பிறவிநல்லதங்கா ளெங்கேதான்போனுளிப்போ
நீ—இத்தனைசெய்திருந்தால் ஏன்போருளென்பிறவி
நான் — அறிவேனறிவேனுன் ஞசாரவார்த்தையெல்லாம்
உன்—காருடவித்தையெல்லாம் கண்டறிவேனிப்போது
போதுமடியிவ்வார்த்தை பொற்கொடியேகட்டிவையும்
இவ்வளவுசெய்திருந்தால் ஏன்போருளென்பிறவி
கொஞ்சவுபசாரம் கூறவந்தாயெந்தனுக்கு
கள்ளவுபசாரம் காட்டவந்தாயெந்தனுக்கு
என்பிறவிநல்லதங்காள் எழுந்துபோனவழியறியேன்
என்றுசொல்லிதானெழுந்தா னியலானநல்லதம்பி
அரண்மனையேழுகட்டும் அந்தப்புறந்தாண்டி
தேரோடும்வீதி தெருவீதிதான்கடந்து
அண்டையசல்பெண்டுகளா அக்காமாரே தங்கைமாரே
எதிர்வீட்டுபெண்டுகளா என்னைப்பெற்றதாய்மாரே
ஆரடிதங்கைமாரே அசல்வீட்டுத்தங்கைமாரே
என்பிறவிநல்லதங்கா ளிங்குவரக்காண்கில்லையோ
ஏழுபிள்ளை நல்லதங்கா ளிங்குவரக்காண்கில்லையோ
அசல்வீட்டுத்தங்கைமார்க ளரிவையெடுத்துரைப்பார்
வந்தாளேவந்தாளே மதனியார்மாளிகைக்கு
வந்ததேபோதுமப்பா மாபாவிவாசலுக்கு
அவள்—பண்ணுதகோலமெல்லாம்பண்ணினுளூன்தேவி
வந்தவுடனேயவள் வாசல்கதவடைத்தாள்
ஓடிக்கதவடைத்து ஒருமட்டாய்மண்ணறைந்தாள்
சாத்திக்கதவடைத்தாள் தாள்பூட்டிமண்ணறைந்தாள்
ஈரமண்கொண்டுவந்து இருபக்கந்தானறைந்தாள்
குழந்தைகுடிப்பதற்கு கூழுங்கிடையாதெனருள்
பசியதுதான்தணியப் பச்சைஜலமில்லையென்ருள்
கீளகள்தெளிவதற்குக் கரண்டிஜலமில்லையென்ருள்
செய்யாதகோலமெல்லாம் செய்துவைத்தாளுள்தேவி
கவிழ்ந்ததிருமுகத்தை கண்ணெடுத்துப்பாரேனென்ருள்
பண்ணுதகோலமெல்லாம் பண்ணிவைத்தாளுன்தேவி
கொன்றைகள்வைத்திருக்குங் கோணுதசாலைவழி

அருமைமக்களெழுவருடன் ஆத்தாளும்போய்நடந்தாள்
போனதோர்சேதிதனைப் போர்மன்னன்தானறிந்து
தங்கையும்போனவழி தானுமறியவில்லை
என்றுமேநல்லதம்பி இயல்பாகவேதுசொல்வான்
கன்னிநல்லதங்கையைநான் காட்டிலேகண்டழுதேன்
வீட்டுக்குவந்ததொரு மெல்லியரைநானறியேன்
ஏதேதுசெய்தாளோ என்னுடையபெண்சாதி
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மருந்துதான்வைத்தாளோ மாயப்பொடிபோட்டாளோ
ஈடுதான்வைத்தாளோ என்னவகைசெய்தாளோ
என்றுமேநல்லதம்பி இயலாகதானினைந்து

நல்லதம்பி நல்லதங்காளைக் காட்டில் தேடுதல்

அப்போ - ஒற்றைநாயோடேயல்லோஓடுகிறான்நல்லதம்பி
ஓட்டமாயோடும்போது உத்தமனார்வீரியர்க்கு
மீசைதுடித்திடுமாம் வெகுகோபம்வந்திடுமாம்
கண்கள்சிவந்திடுமாம் காந்தாளம்வந்திடுமாம்
பக்கச்சதைகளெல்லாம் பம்பரம்போல்துடிக்கும்
ஆடுந்தொடைகளெல்லாம் அம்பாய்ப்பறந்திடுமாம்
ஆவாரங்கொத்ததனை அடையாளந்தான்பிடித்தான்
கணையாழிமோதிரத்தைக் கண்டுமேதானெடுத்தான்
எடுத்துமேநல்லதம்பி இயலாகத்தானினைப்பான்
இந்தவழியில்தானே இவளுமிருக்கவேண்டும்
என்றுமேகுதிரைவிட்டான் இயல்பாய்நல்லதம்பி
குதிரைவிடும்போது கொற்றவனுமேதுசொல்வான்
மாடுமேய்க்குந்தம்பியரே மாட்டாஞ்சிறுபாலகரே
என்பிறப்புதங்கையவ ளிங்குவரக்கண்டதுண்டோ
ஏழுபிள்ளைநல்லதங்கா ளிங்குவரக்கண்டதுண்டோ
அப்போதுமாட்டிடையர் அறியவெடுத்துரைப்பார்
வந்தாளிருந்தாளையா வழிமார்க்கம்போனாளையா
உங்கள்குலமென்றறியோம் உடன்பிறவியென்றறியோம்
இருட்டுக்கிணறென்று எந்திழையும்கேட்டாளே
காட்டிக்கொடுத்தோமையா காரிழையாள்நாயகிக்கு
அப்படிச்சொல்லுகையில் அன்பானநல்லதம்பி
நீங்கள்—காட்டிக்கொடுக்கலாமாகடக்கப்போய்நிற்கலாமா

பார்த்துமிருந்தீர்களா பழிகாரப்பாவிகளா
எனக்குப்பிறப்பொழிய உமக்குபிறப்பல்லவோ
என்றுமேநல்லதம்பி இயல்பாகத்தானடந்தான்
காடுசெடிகளெல்லாம் கனக்கவேதேடிவாருன்
ஆறுசுனைகளெல்லாம் ஆங்காங்குதேடிவாருன்
குட்டைகுளங்கண்டாலே குதித்திறங்கித்தேடிவாருன்
துறவுகளைக்கண்டாலே துள்ளிக்குதித்திடுவான்
வழியிலிப்படித்தேடி வருகின்றவேளையிலே
நல்லதங்காள்விழுந்த நற்கிணற்றின்முன்வந்தான்
பாலூட்டும்பாலாடை பாவையடையாளம்
மங்கலியம்கண்டானே மன்னனந்தநல்லதம்பி

நல்லதங்காள் கிணற்றில் விழுந்திருந்ததைக் கண்டு நல்லதம்பி பரதவித்தல்

அப்போது-பாழுங்கிணற்றருகே பார்த்துவயிறெரிந்தான்
இருண்டகிணற்றருகே எங்கிமனந்தளர்ந்தான்
நல்லதங்கையென்றல்லோ தரையிற்புரண்டழுதான்
அம்மாடியென்றல்லோ அடித்துப்புரண்டழுதான்
முத்துப்போல்தண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டு
பம்பைமயிரையெல்லாம் பாழ்கிணற்றிற்பிச்செறிந்தான்
ஐயோசிவனேயென்று அடித்துப்புரண்டழுதான்
ஓடிக்குதித்தானே உத்தமியாள்கங்கையிலே
தாண்டிக்குதித்தானே தயவானகங்கையிலே
உடற்பிறந்தார்பிள்ளையெல்லாம் ஓடியெடுக்கலுற்ருன்
தன்பிறப்புப்பிள்ளையைத் தாவியெடுக்கலுற்ருன்
தங்கையைமெள்ளவல்லோ தடவியெடுத்தானே
வாரியெடுத்துவைத்து வண்ணமடிமேலே
முகத்தோடேமுகமணைத்து முத்தமிட்டுக்கொண்டானே
செத்தபிணத்துக்குச் சீரிட்டுப்பார்த்தழுதான்
மாண்டபிணத்துக்கு வரிசையிட்டுப்பார்த்தழுதான்
நாவல்பழமோதான் நல்லதங்காள்பெற்றபிள்ளை
கோவப்பழமோதான் கொம்பனையாள்பெற்றபிள்ளை
கையொத்தபாலகண்டி கண்ணுட்டிபெற்றபிள்ளை
ஈச்சம்பழமோதான் என்னுச்சிபெற்றபிள்ளை

கைக்கேற்றபாலகன் கண்ணுட்டிபெற்றதெல்லாம்
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானுமப்போ

நல்லதம்பி நல்லதங்காளையும் பிள்ளைகளையும் தகனஞ் செய்தல்

தங்கையைத்தானெடுத்து தகனஞ்செய்யவேண்டுமென்று
ஊதாரிதன்னுலே உடற்பிறப்பைநானிழந்தேன்
மாபாவிதன்னுலே மருமகனைநானிழந்தேன்
பெண்ஜாதிதன்னுலே பெண்பிறப்பைநானிழந்தேன்
ஊரில்நெருப்பெடுத்தால் உலகோர்சிரிப்பாரென்று
நாட்டினில்விறகுகொண்டால் நல்லார்சிரிப்பாரென்று
சந்தனக்கட்டைக்கொண்டு சதுராய்ப்பிளந்தடுக்கி
சந்தனக்கட்டையிலே தங்கையைதான்வளர்த்தி
குங்குமக்கட்டையிலே குழந்தைகளைத்தான்வளர்த்தி
வரப்பேரிநெல்லதனை வாய்க்கரிசிபோட்டானங்கே
செண்பகமாலை சிவமாலைவந்திடுமாம்
மல்லிகைமாலைகொண்டு மன்னனலங்கரித்து
சுற்றிவந்துகொள்ளிதனை வைத்தானேதோகையர்க்கு
வலம்வந்தழுதுகொள்ளி வைத்தானேநல்லதம்பி
நெருப்புப்பிடிக்கவில்லை நீருய்ச்சமைய்வில்லை
அக்கினியும்பற்றவில்லை அனலாய்ச்சமையவில்லை
ஏண்டியம்மாதங்கையாரே இத்தனைகோபமென்ன
என்மேலேகோபமது வைக்காதேயென்பிறப்பே
பற்றியெரிந்தாயானல் பழிகளைவாங்குவேனுன்
ஓங்கியெரிந்தாயானல் உயிர்களைவாங்குவேனுன்
நாளைப்பகலுக்கு நான்வாரேன்தங்கையரே
இப்படிச்சொல்லியண்ணன் இரண்டடிதானடந்தான்
நடந்தவன்போனபின்பு நாயகியாளக்கினிதான்
குப்பென்றுதானெழுந்து கொழுந்துவிட்டெரிந்திடுமாம்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

நல்லதம்பி நல்லதங்காளைத் தகனஞ்செய்து வீடுவந்து சேர்தல்

நல்லதம்பியப்பொழுது நலமாகத்தன்மனையில்
எட்டுநாள்துக்கமன்னன் இயல்பாய்ச்சிறைகாத்து



அறுகுபொறுக்கியண்ணன் அலரதலைமுழுகி
முக்காட்டையிட்டுராஜன் மூலையிலேபோய்படுத்தான்
அப்போது-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
தன்னுடையபத்தினியாள் தன்னெதிரேவந்துநின்று
ஆளன்முகம்நோக்கி ஆணழகியேதுசொல்வாள்
என்காணும்ராஜமன்ன எந்தன்மேற்கோபமென்ன
பொல்லாததங்கையவள் போனாலும்போகிறாள்
ஆகாதநல்லதங்கா ளவள்போனால்போறாள்காண்
நீ—காலின்மிதியடியைக் கழற்றிவைக்கலாகாதோ
கொண்டுவந்தவேட்டைகளை கூறிடவுமாகாதோ
அப்போதுநல்லதம்பி ஆளனெடுத்துரைப்பான்
எனக்கும்உனக்கும்பெண்ணே எட்டுமாதவிரதமுண்டு
என்—வருத்தந்தொலைந்தாலே மாதேநானுண்டிடுவேன்
எனக்கும்உனக்கும்பெண்ணே ஒருபிள்ளையுண்டல்லவோ
எம்முடையபிள்ளைக்கு நலமாகவிப்பொழுது
கலியாணம்செய்யவேணும் கண்குளிரப்பார்க்கவேணும்
கண்ணுள்ளபோதேபெண்ணே கண்காட்சிகாணவேணும்
நன்று—மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மன்னவனார்நல்லதம்பி மர்மந்தொடுத்தானே
கலியாணகாரியத்தைக் கடுகெனவேசெய்யென்று

நல்லதம்பி பிள்ளைக்குக் கலியாணஞ்செய்ய பந்தல் அலங்கரித்தது

சாந்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு
கரும்பாலேகால்நிறுத்தி அரும்பாலேபந்தலிட்டார்
முத்தைப்பிளந்து முகூர்த்தக்கால்சொப்பனிட்டார்
பவளத்தைப்பிளந்து பந்தலலங்கரித்து
தேக்குமரம்பிளந்து தெருவெல்லாம்பந்தலிட்டார்
வாழைமரம்பிளந்து வாசற்காலலங்கரித்தார்
இட்டார்கள்பந்தலங்கே இருநூற்றுக்காதவழி
தொட்டார்கள்பந்தலங்கே தொண்ணூற்றுக்காதவழி
ஓலையால்பந்தலல்லோ உத்தமர்க்குதானுமிட்டார்
நல்லதம்பிசேனைகட்கு நலமாகபந்தலிட்டார்
தன்னுடையசேனைகட்கு தகுமானபந்தலிட்டார்
அப்போதுநல்லதம்பி ஆணழகனேதுசெய்தான்
கல்தச்சரையழைத்து ஆணழகனேதுசெய்தான்

தச்சர்களேதச்சர்களே தகுமான தச்சர்களே
என்வார்த்தைகேளுங்க ளெனக்கிசைந்ததச்சர்களே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
எந்தனுடன்பிறந்த எனக்கிளையாள் நல்லதங்காள்
ஏழுபிள்ளை நல்லதங்கா ளென்வீடுவந்தவிடத்தில்
பசித்தமுகம்பார்த்து பாலடைப்பால்வாராததால்
களைத்தமுகம்பார்த்து கரண்டிபால்வாராததால்
என்தங்கைநல்லதங்கா ளேந்திழையும்கோபமாகி
கோபம்பொறுக்காமல் கொம்பனையுந்தானடந்து
பிள்ளைகளும்தானுமாகப்போய் குதித்தாள்பொய்கையிலே
மக்களுந்தானுமாக மாண்டாளேபெருந்துறவில்
அப்படிச்செய்ததொரு அரும்பாவி யென்மனையாள்
என்மனையாள்சேனைகட்கு இடிபந்தல்போடுமென்றான்
கற்பந்தல்போட்டு கவிழ்த்துவிடுசேனைகளை
அந்தவுரைகேட்டு அழகுள்ளதச்சரெல்லாம்
அரும்பாவிசேனைகட்கு அழகுபந்தல்போட்டார்கள்
பெரும்பாவிசேனைகட்குப் பெரும்பந்தல்போடுவித்தார்
மூளியலங்காரி மூதேவிபந்துகட்கு
ஆணழகன் நல்லதம்பி அனர்த்தம்வரப்பந்தலிட்டார்
சூத்திரப்பந்தலிட்டார் சுழல்பந்தல்தானுமிட்டார்
கல்லாலேபந்தலது கலகம்வரத்தானுமிட்டான்
தன்னுடையசேனைகட்கு தென்னோலைபந்தலிட்டான்
பந்தலிட்டபிற்பாடு பார்மன்னனேதுரைப்பான்
மன்னவன் நல்லதம்பி மர்மமாயேதுரைப்பான்
மூளியலங்காரி மூதேவி நாயகிக்கு
படுபாவிநாயகிக்கு பட்சமாயேதுரைப்பான்
உங்கள்மனிதருக்கு உகந்துநீபாக்கனுப்பும்
எங்கள்மனிதருக்கு யான்பாக்கனுப்புகிறேன்
என்றுரைத்துநல்லதம்பி எல்லோர்க்கும்பாக்குவைத்தான்
கப்பலேறிகடல்கடந்து பாக்குவைத்தான்
வற்றிக்கிடந்ததொரு வாகானகாவேரி
காவேரிநிரம்பியங்கே கரைபுரண்டுவந்ததுபோல்
பூரித்திருதோளும் பொன்னுபரணமின்ன
மாட்டின்மேல்பாக்குமங்கே மனிதருக்குபோகவிட்டான்
சின்னமடிகோலி சீமையெங்கும்பாக்குவைத்தான்

பெரியமடிகோலி பூமியெங்கும்பாக்குவைத்தான்
கலியாணமென்றுசொல்லிக்கடல்கடந்துபாக்குவைத்தான்
இப்படியாகப்பாக்கு இன்பமாய்வைத்தபின்பு
தன்னுடையசேனைகட்கும் தாம்பூலம்வைத்தபின்பு
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
ஜாதிஜனங்களுக்கு தனிப்பாக்குதானளித்தாள்

நல்லதம்பி ஓலையெழுதி அனுப்புதல்

ஆனுலழகுமன்னன் அறிவுள்ள நல்லதம்பி
என்னவென்றுசொல்லி எழுதுவானேலைதன்னை
என்பிள்ளைதம்பியர்க்கு இயலாகவிப்பொழுது
சித்திரைமாதத்திலே சீர்பத்தாந்தேதியிலே
வெள்ளிக்கிழமையிலே விடிந்தைந்துநாழிகையில்
பகல்முகூர்த்தமென்றுசொல்லிபாங்கானஓலையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
அனைவருந்தாமறிய அவ்வோலையெழுதினனே
கலியாணவோலைதன்னைக் கடுகெனவேயெழுதினனே
அப்போ-மன்னவனுர் நல்லதம்பிமர்மமாயெழுதுகிருன்
அவ்வோடுவிட்டு மறுவேடுதானெடுத்து
என்தங்கைநல்லதங்காள் இளங்கொடியாள்நாயகியும்
கூடப்பிறந்த குலப்பெண்ணுமென்தங்கை
தங்கையும்பெற்றெடுத்த தனஞ்சேயர்களேழுபேரும்
பங்குனிமாதத்திலே பதிமூன்ரும்தேதியிலே
வியாழக்கிழமையிலே விடிந்தைந்துநாழிகையிலே
பாழுங்கிணற்றதனில் பத்தினியும்பிள்ளைகளும்
விழுந்துஇறந்தார்கள் விதியினுடகாரணத்தால்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுண்டஞ்சேர்ந்தார்கள்
அரும்பாவிதன்னுலே அரன்பாதஞ்சேர்ந்தார்கள்
கொடும்பாவிதன்னுலே கொம்பனையாள்தானிறந்தாள்
மாண்டுமடிந்தசேதி சீமையுள்ளார்தாமறிய
செத்துமடிந்தசேதி சீமையுள்ளார்தாமறிய
ஓலையெழுதினனே உத்தமசிகாமணியும்
மாண்டுமடிந்தாரென்று மன்னனேலை யெழுதினனே
ஓலையெழுதியல்லோ உகந்துகுறியுமிட்டு

இறந்தவோலைதானெழுதி இருபக்கம்சுட்டெரித்து
இருவோலைதன்னையு மிசைவாகத்தானெடுத்து
தூதுவனைத்தானழைத்து சுருக்காயெடுத்துரைப்பான்
ஓலைச்சுருள்கொடுத்து உத்மனுக்கேதுசொல்வான்
மூளியலங்காரி மூதேவிசேனைகட்கும்
கலியாணவோலைதன்னைக் கையிற்கொடுமென்று
என்றுமேநல்லதம்பி இன்பமாய்த்தான்கொடுத்து
தூதுவரானவர்க்குச் சுருக்காயெடுத்துரைப்பான்
எந்தனதுசேனைகட்கு இறந்தவோலைகொண்டுசெல்லும்
என்றுமேநல்லதம்பி இசைவாகத்தான்கொடுத்தான்
கொடுத்ததைத்தான்வாங்கிக் கொப்பெனவேதானடக்க
அரசன்சொல்கடவாமல் அப்பொழுதேபோகலுற்ருர்
மூளியலங்காரி மூதேவிபந்துகட்கு
நல்லதம்பிதன்னுடைய நலமுள்ளபந்துகட்கும்
ஓலையைத்தான்கொடுத்து உத்தமரும்வந்துவிட்டார்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
இருதிறத்துச்சேனைகளும் அங்கங்கேபயணம்வாரார்
மூளியலங்காரி மூதேவிசேனையர்கள்
வருங்கின்றசந்தோஷம் மட்டுமிதங்களில்லை
பார்க்கமுடியாது பாரிலிடங்கொள்ளாது
காணமுடியாது கட்டுரைக்கலாகாது
அவரவர்கள் - தங்கக்கிரீடமும் தார்வேந்தர்தன்னழகும்
முத்துக்கிரீடமும் முடிமன்னர்தோளழகும்
பவளக்கிரீடமும் பார்மன்னர்தோளழகும்
உத்தரீயந்தான்புரள உத்தமர்கள்வாராரே
தேரேறிமன்னரெல்லாம் தெருவீதிவாராரே
ஆனையேறிமன்னரெல்லாம் அசைந்துமேவாராரே
கொண்டைமுடியுடனே கொண்டைதாங்கிப்பூவுடனே
அவர்களதுதேவிகளும் அனேகம்பேர்தாதிகளும்
மஞ்சள்குளிப்புடனே மையுடனேபொட்டுடனே
பாங்கிமாரெல்லோரும் பல்லக்குத்தாங்கிவர
வந்துநிறைந்தாராம் வாசலிடங்கொள்ளாமல்
பந்தியாயுட்கார்ந்தார் பந்தலிடங்கொள்ளாமல்
இவளுடையசேனைகள் இப்படியாயிருக்க
ஆணழகன்நல்லதம்பி அவனுடையசேனைகட்கு

இவனுடையமனிதருக்கு இறந்தவோலைவந்தபின்பு
ஓலைச்சுருள்படிக்க உடன்பிரித்துப்பார்த்தார்கள்
தாமக்கருங்குழலாள் நல்லதங்காள்மாண்டாளென்று
நாமமுடியழகன் நல்லதம்பிராஜாவின்
சேனைகளத்தனையுஞ் சேர்ந்துமிகவழுதார்
முட்டியழுதார்கள் முகத்திலறைந்துகொண்டு
அவரவர்கடகக்கையா லடித்துக்கொண்டுதானழுதார்
தாய்வீட்டுச்சேனையெல்லாம் தலைவிரித்துத்தானழுதார்
மார்பிலறைந்துகொண்டு மண்மேற்புரண்டழுதார்
போய்பார்ப்போமென்றுசொல்லி புண்ணியர்கள்வாரார்
கண்டுவருவோமென்று காரிழைமார்வாரார்கள் [கள்
வாடிமுகந்தளர்ந்து வண்ணமுகம்வேறுபட்டு
இளைப்புங்களைப்புமா எல்லோரும்வாரார்கள்
அலைகுலையத்தலைகுலைய அனைவோரும்வாரார்கள்
வந்துமேஉள் நுழைந்தார் வாசலிடங்கொள்ளாமல்
நேர்த்தியாயமைந்திருக்கும் சூத்திரப்பந்தலின்கீழ்
சூத்திரப்பந்தலின்கீழ் சூழ்ந்து நிறைந்தார்கள்

நல்லதம்பி பிள்ளை தாலி தரித்தல்

இப்படியாக இருக்கின்றவேளையிலே
நல்லதம்பிபெற்றெடுத்த நாமமுடியானை
சிக்காய்நெல்லி சிறுப்பயிறுகஸ்தூரி
வாசனைவர்க்கமுடன் வகைவகையாய்க்கொண்டுவந்து
மணவறையின்மேலாக மாப்பிளளையைக்குந்தவைத்து
மாப்பிள்ளைபெண்ணுக்கும் மணவறையில்நலங்குமிட்டார்
சிக்கைக்கழித்தார்கள் சீராக இருவருக்கும்
ஸ்நானங்கள்செய்துவைத்தார் தாமமுடியார்கள்
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரிகப்பட்டுடுத்தி
சிவசிவாவென்றுசொல்லி திருநீற்றுக்காப்புமிட்டு
மாப்பிள்ளையைக்கொண்டுவந்து மன்னரலங்கரித்தார்
அனேகவிதபூஷணத்தா லலங்கரித்தபின்பு
பொற்கொடிமாரெல்லோரும் பெண்ணையலங்கரித்தார்
இருவரையுங்கொண்டுவந்து இன்பமுள்ளபந்தலிலே
மணவறையின்முன்பாக மன்னவரைக்குந்தவைத்து

அரசாணிமுன்பாக ஆளனைக்குந்தவைத்து
முந்நூறுபார்ப்பார்கள முகூர்த்தமிட்டமங்கிலியம்
நானூறுபார்ப்பார்கள் நாளிட்டமங்கிலியம்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
கட்டுங்கள் தாலி கழுத்திலேயென்றுரைத்தார்
அப்போது ஆணழக னப்படியேகட்டலுற்றான்
என்னவென்றுசொல்லி எடுத்தவன்கட்டலுற்றான்
சிவசிவாவென்றுசொல்லி திருக்கழுத்தில்கட்டினனே
அரகராவென்றுசொல்லி அழுத்தினர்மங்கிலியம்
பிரமன்முடிமூன்றுமுடி போட்டானபிற்பாடு
அங்கிருந்தமன்னரெல்லாம் அழகுபட்டங்கட்டினர்கள்
அம்மான்மாரெல்லோரும் அடங்கலும்பட்டமிட்டார்
நல்லதம்பிபெற்றெடுத்த நவமணியுமேதுரைப்பார்
என் — ஐயாவேஐயாவே அடியேனொருவார்த்தை
உம்முடன்தான்பிறந்த உத்தமியாள்நல்லதங்காள்
அவளுமொருசீமை ஆளுகின்றாரென்றீரே
அவள்பேரைச்சொல்லி அழகுபட்டங்கட்டுமென்றான்
அத்தைபேரைச்சொல்லி அணியவேண்டுமென்றான்
அத்தையின்பேருரைக்க ஆணழகன்வயிறெரிந்து
பொன்னின்குடமேயென் பூபாலராஜாவே
அத்தையைக்கொன்றவள்தான் அரும்பாவியுன்தாயார்
மாமியைக்கொன்றவள்தான் மாபாவியுன்தாயார்
என்று— அதிகவயிறெரிந்து அப்போதுநல்லதம்பி
வாளையுருவி மன்னவனுந்தானெழுந்தான்
தகப்பனிடகோபமதை தார்வேந்தன்தான்பார்த்து
அண்ணுவே அண்ணுவே அதிகோபங்கொள்ளாதே
கலியாணவாசலிலே கலகங்கள்வையாதே
இங்குவைத்தசூத்திரங்க ளெனக்குத்தெரியவரும்
அதற்குமேல்சூத்திரங்க ளறிவேன்காணென்தகப்பா
இன்னமொருநாழிகையி லங்கேதெரியுதுபார்
மூளியலங்காரி மூதேவிசேனையெல்லாம்
அவளுடையசேனையெல்லாம் அரன்பாதஞ்சேருதுபார்
மாதாவின்சேனையெல்லாம் மாண்டுமடியுதுபார்
பதறாதேபதறாதே பட்சமுள்ளயென்தகப்பா
அரும்பாவிசேனையெல்லாம் அடியோடேமாளுதுபார்

மாபாவியின்சேனையெல்லாம் மாண்டுமடியுதுபார்
பொறும்பொறுமென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டான்
அப்போ—ஆறினன்கோபம் அமர்ந்தான்கொலுதனிலே
கலியாணசடங்குகள் கடுகமுடிந்தவுடன்
மூளியலங்காரி மூதேவிநாயகிக்கு
மன்னவனர் நல்லதம்பி மர்மமாயெடுத்துரைப்பான்
உங்கள்மனிதருக்கு உண்ணவேநீபடைப்பாய்
எங்கள் மனிதருக்கு யான்படைப்பேன்சாதனங்கள்
தன்கணவன்சொன்னபடி சம்மதித்தாள்மூதேவி
அப்போதுபந்திகள் அமர்த்தினர்பந்தலிலே
மூதேவிசேனைகள் முடிமன்னரத்தனையும்
சூத்திரப்பந்தலின்கீழ் சூழ்ந்திருந்தாரெல்லோரும்
நல்லதம்பிசேனையெல்லாம் நலமானபந்தலிலே
பக்கங்கொலுவிருந்து பந்தியமர்ந்தார்கள்
வரிசைவரிசையாக வந்தார் இலைபோட்டு
வாழையிலைபோட்டு வட்டித்தார்சாதங்கறி
இவளுடையசேனைக்கும் இவள்பரிமாறிவாருள்
நல்லதம்பிசேனைக்கு நங்கையவளேதுசெய்தாள்
வஞ்சனையாகவல்லோ வட்டித்துவாராளே
வரகரிசிசாதமது வட்டித்தாளப்போது
அகத்திக்கீரைகுழம்பதனை அள்ளியவள்வார்த்து
வஞ்சனைசெய்துமல்லோ வாராளலங்காரி
தங்களுடையசேனைக்குத் தகுந்தபடியேதுசெய்தாள்
குத்துப்பருப்புமிட்டாள் கூசாமல்நெய்ம்சாரிந்தாள்
அள்ளிப்பருப்புமிட்டாள் அதுகண்டுநெய்வார்த்தாள்
பத்துவிதக்கறியும் பதினெட்டுப்பச்சடியும்
எட்டுவிதக்கறியும் இயலானபச்சடியும்
சுத்திக்கறியும்வைத்து சொம்புதயிர்முன்னேவைத்தாள்
உண்ணுங்களென்றுசொல்லி உபசரணைசெய்திருந்தாள்
நல்லதம்பிசேனைகட்கு நடக்குதுயிந்தவிதம்
அப்போ-மூளியலங்காரி மூதேவிநாயகியும்
தன்னுடையசேனைகட்கு தான்பரிமாறிவாராள்
பாவையுடசேனையெல்லாம் பந்தியமர்ந்தார்கள்
அந்தநல்லவேளையிலே அங்கிருந்தசேனையர்கள்
ஆகாதகுறிகள் அட்சணமேகண்டார்கள்

இருக்கின்றமன்னருக்கு இடதுதோள் துடித்திடுமாம்
வைத்திருந்தசாதங்கறி ரத்தகவுலடிக்கும்
உற்றபதார்த்தவகை உதிரகவுலடிக்கும்
அங்கிருந்தசேனையெல்லாம் அவர்களுமேதுசொல்வார்
அப்போதுசேனையர்க ளடங்கலுமேதுசொல்வார்
என்னமோஏதோ இடிவந்துநேர்ந்திடுமோ
மாளாப்பழிநமக்கு மீளாமல்வந்திடுமோ
தீராப்பழிநமக்குச் சேரவேவந்திடுமோ
என்றுசொல்லிமன்னவர்க ளேங்கிமனந்தளர்ந்து
சிந்தைகலங்கியவர் திடுக்கிட்டுமெய்ம்மறந்து
என்னமோயேதோவென்று இருக்கின்றவேளையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நல்லதம்பிசேனைகட்கு நன்றாய்ப்படைக்கலுற்றாள்
அகத்திக்கீரைகுழம்பு அடைவாகத்தான்வார்த்தாள்
உண்ணுங்களென்றுசொல்லி உபசரணைசெய்துவாராள்
சாதமும்கீரையும நல்லதம்பிசேனையுண்ணுகிறார்
முன்சோறுஉண்டுமல்லோ பின்சோறெடுக்கும்போது

நல்லதம்பி ஆசாரியரைக்கண்டு மூளியலங்காரி சேனையின்பேரில் சூழற்பந்தலைத் தட்டி மடிய வைத்தல்

அப்போதுநல்லதம்பி ஆசாரிக்கெடுத்துரைப்பான்
அண்ணடா அண்ணடா ஆசாரி அண்ணடா
ஆர்காணுமாசாரி அறியவொருவார்த்தை
மூளியுடசேனையெல்லாம் முழுவதுமடிவதற்கு
அவதானபந்தலை அடுக்காகத்தட்டிவிடு
போய்நீயும்தட்டிவிடும் புத்தியுள்ள ஆசாரி
பந்தலின்சூத்திரத்தைப் பார்த்துவிடுமாசாரி
என்றுசொல்லிநல்லதம்பி எடுத்துவிட்டானசாரி
தந்திரமாய்ப்பந்தலையும் தட்டிவிட்டானசாரி
அவதானப்பந்தலை அடுக்காகத்தட்டிவிட்டான்
மூளியுடசேனையெல்லாம் முறிந்துமடியுதங்கே
அப்போது—மூளியலங்காரி மூதேவிசண்டாளி
கையைமுறித்துக்கொண்டுகதவண்டைபோய்ச்சேர்ந்தாள்
என்னசெய்யப்போறேனென்று ஏங்கியழுகலுற்றாள்
ஒன்றைக்குரலிட்டு ஓங்கியழுகலுற்றாள்

மாபாவிசீமையிலே மன்னர்களைத்தோற்றுவிட்டேன்
பெரும்பாவிசீமையிலே பெண்டுகளைத்தோற்றுவிட்டேன்
ஒருகோடிகும்பிழந்து ஒற்றைக்காலாகிவிட்டேன்
சூதுசெய்துகொன்றானே துரோகியவனென்கணவன்
கல்லாலேபந்தலிட்டுக் காளைகளைக்கொன்றுவிட்டான்
ஒருத்திவந்துள் நுழைந்து ஒருகோடிகும்பிழந்தேன்
என்று-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நின்றுபுலம்புகையில் கண்டானேராஜமன்னன்
ஆணழகன்நல்லதம்பி அலங்காரிக்கெடுத்துரைப்பாள்
பத்துபேரைக்கொன்ற பழிகுலத்திவாடியென்று
எட்டுபேரைக்கொன்ற இழிகுலத்திவாடியென்று
என்னென்னபங்கம் இளங்கொடிக்குசெய்யலுற்றான்
முன்சிகையைத்தான்பிடித்து நல்லமணப்பந்தலிலே
மூக்குவஸ்தனமறுத்தான் முத்துமுடிபந்தலிலே
கொண்டையறுத்தானங்கே கொத்தோடேதொங்கவிட்டான்
காதையறுத்தானங்கே கழுத்திலேதொங்கவிட்டான்
கண்ணைப்பிடுங்கியங்கே எண்ணெயையூற்றிவைத்தான்
இன்னமும்நல்லதம்பி ஏதேதுசெய்யலுற்றான்
கழுதையைக்கொண்டுவந்து கட்டழகிமூளியரை
கழுத்திலெருக்கமாலை கனமாகசூட்டிவிட்டான்
கழுதையின்மேலேற்றிவைத்து கைகொட்டிதானகைத்தான்
சேவகரைத்தானழைத்து தெருவிலிழுங்களென்றான்
கழுதையைக்கைபிடித்து கடுகியிழுங்களென்றான்
அழகுள்ளவீதியெல்லாம் அங்கங்கேசுற்றுமென்றான்
நாலுதெருவிலே நாரியவள்கோலம்வந்தாள்
மூன்றுதெருவிலே மூதேவிகோலம்வந்தாள்
நாலுகோலம்வந்தபின் நல்லதம்பியேதுசெய்தான்
மூளியலங்காரி மூதேவிதோஷியரை
சுண்ணும்புக்காளவாயில் சுட்டானேசுந்தரியை
சுட்டானேசுந்தரியை சுகமானநல்லதம்பி
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
மனையாளைச்சுட்டெரித்த மற்றுநாள்காசிராஜன்
மச்சான்வரவை மன்னவனும்பார்த்திருந்தான்
நல்லதங்காள்நாயகனும் நற்காலந்தான்பிறந்து
காசிராஜனுக்கு காலந்தெளிந்ததங்கே

காலமதுதெளிந்து கனத்தமழைபொழிந்து
சீமையதுதெளிந்து செல்வமழைபொழிந்து
முப்போகந்தான்விளைந்து முயற்சியுள்ளசீமையிலே
காலந்தெளிந்தது கம்புவிளைந்தது
சீமைசெழித்தது செல்வமழைபெய்தது
நாடுசெழித்தது நல்லமழைபெய்தது
கருப்புதெளிந்தபின்பு காசிராஜனேதுசெய்தான்
தாய்வீடுபோனபெண்ணைத் தானழைக்கவேணுமென்று
நல்லநங்காள்நாயகியை நாயகனழைக்கவென்று
செட்டிகடைக்குவந்தான் சேலைவிலைமதித்தான்
பார்ப்பான்கடைக்குவந்தான் பட்டாடைவிலைமதித்தான்
பாரியவளேறிவர பல்லாக்குகொண்டுவாரான்
புத்திரர்களேறிவர பொன்காடிகொண்டுவாரான்
பலபலகனிவகைககள் பாலருக்குக்கொண்டுவாரான்
சிற்றுடைகொண்டுமன்ன சிறுசதங்கைகொண்டுவாரான்
தாய்வீடுபோனபெண்ணைத் தானழைக்கவாரானே
குதிரைப்பரிவாரம் கோடிதளம்முன்னடக்க
ஆனைப்பரிவாரம் அடங்கலும்பின்னடக்க
கவிஞர்கவிபாடக் கட்டியங்கள்கூறிவர
ஆனையும்சேனையும் அத்தனையும்முன்னடக்க
எக்காளந்தானூத இடிபாணந்தான்முழக்க
நாகசுரமூத நவிரிகொம்பூத
பேரிகைகொட்டிவரப் பெரியசின்னமூதிவர
கத்திகட்டுஞ்சேவகருங் காவலரும்முன்னடக்க
வந்துநிறைந்தார்கள் வாசலிடங்கொள்ளாமல்
நல்லதம்பிக்குக்காசி நாடனெடுத்துரைத்தான்
மைத்துனரேமைத்துனரே மனையாட்டியெங்கேயென்றான்
ஏலுமிச்சம்வர்னமான இளங்கொடியாளெங்கேயென்றான்
என்றகாசிராஜனுக்கு அடைவாகயேதுசொல்வான்
அருந்தங்கைசெத்துமச்சான் அநேகநாளாச்சுதப்பா
அப்போதுகாசிராசன் அடைவாகயேதுசொல்வான்
பெண்சாதிபோனால்போறாள் பிள்ளைகளெங்கேயப்பா
அப்போதுமன்னவனு மைத்துனனுக்கேதுசொல்வான்
சேயர்களிறந்துபோய் சேனநாளாச்சுதப்பா
அப்போதுமன்னவனும் மைத்துனனுக்கேதுசொல்வான்

ஒன்றிரண்டுமொண்டாலும் உலகத்திலுள்ளதென்பார்
ஏழுபிள்ளைமாண்டவிதமெனக்கறியச் சொல்லுமென்முன்
அந்தவுரைகேட்டு ஆணழகன் நல்லதம்பி
மர்மமொழியாமல் மைத்துனருக்கேதுசொல்வான்
வந்தாளே நல்லதங்காள் மக்களுந்தானுமாக
காட்டிலேகண்டுநான் வீட்டுக்குப்போங்களென்றேன்
எந்தனுரைப்படியே இளங்கொடியாள்வந்தாளென்று
புத்திரர்களுந்தானுமாக பொற்கொடியாள்வந்தாளென்று
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
செய்தகொடுமையாலே செல்வபதிபிள்ளைகளும்
கோபம்பொறுக்காமல் குதித்தார்கள் பொய்கையிலே
அந்தவிசேஷம் அறிந்துதானோடிவந்து
மாண்டவரைத்தானெடுத்து மயானச்சுடலையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
தங்கைப்பழிக்காக தகுந்தபழிவாங்கிவிட்டேன்
மக்கள்பழிக்காக மனையாளைக்கொன்றுவிட்டேன்
நான்—இறந்துமடியாமல் இருந்தேனுனக்காக
என்றவுரைகேட்டு ஏங்கிமனந்தளர்ந்து
பிள்ளைக்குக்காட்சியாய் பெண்கொண்டுவாராமல்
கலியாணம்செய்துநான் கண்குளிரப்பாராமல்
செல்வரைப்பார்க்கிலும்நான் சீமையாளப்போறேனோ
மைந்தரைப்பார்க்கிலும்நான் மண்டலமாளுவேனோ
என்றுமேகாசிராசன் இனியில்லாதுக்கமுடன்
கட்டாரிநட்டுமவன் கடுகமடிந்தானே
அப்போதுநல்லதம்பி அதிகவிசனமுடன்
தங்கையைப்பார்க்கிலும்நான் தரணியாளப்போறேனோ
மச்சானைப்பார்க்கிலும்நான் மண்டலமாளுவேனோ
என்றுமவன் நல்லதம்பி இனியாருக்கோபமுடன்
கட்டாரிநட்டுமவன் கடுகமடிந்தானே
இவ்விதமாக இவர்கள்மடிந்திருக்க

நல்லதங்காள் நல்லதம்பி காசிராஜன் ஏழுபிள்ளைகள் மடிந்திருப்பதைக் கண்டு பார்வதி பரமசிவன் வந்து எழுப்புதல்

பார்வதிதேவியார்க்குப் பார்க்கமுடிபோகவில்லை
பரமசிவனுக்குப் பார்க்கமுடிபோகவில்லை

ஈஸ்வரனுமீஸ்வரியும் இரக்கமுடன்தானெழுந்து
இடபவாகனமேறி இன்பமுடனப்போது
கைலாசம்விட்டுமவர் கடுகபயணமதாய்
கப்பரையிற்தண்ணீர்கொண்டு கையில்பிரம்புகொண்டு
கையில்பிரம்பெடுத்து கப்பரையில்ஜலமெடுத்து
செத்தவர்கள்தன்மேலே சீராய்த்தெளிப்பதற்கு
பார்வதிதேவியாரும் பரமசிவனாரும்
கைலாசம்விட்டல்லவோ கடுகவழிதாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி இவர்களும்வந்தார்கள்
பாழுங்கிணற்றருகே பரமசிவன்வந்துநின்று
இருண்டகிணற்றருகே ஈஸ்வரியும்வந்துநின்று
ஏழுபிள்ளைநல்லதங்காள் இறந்துகிட்டப்பவர்மேல்
தண்ணீரைத்தான்தெளித்துத் தட்டியெழுப்பினார்கள்
அப்போ-தூங்கியெழுந்தவர்போல்சுகமாகவெழுந்தார்கள்
ஏழுபிள்ளைதானுமப்போ எழுந்துமேதானும்வந்தார்
மச்சானும்மச்சானும் அச்சமில்லாதெழுந்தார்கள்
அப்போதுநல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பாள்
அரகரமகாதேவா அந்திவண்ணபரசுபாணி
எள்ளுக்குள் நிறைந்து நின்ற ஏகபரஞ்சுடரே
என்தாயேபார்வதியே என்னையாளவந்தவளே
எங்களையெழுப்பிவைத்த ஏகபராபரியே
உங்கள்தெரிசனங்கண் டுள்ளமெல்லாம்பூரித்தோம்
எங்களுக்குக்காட்சிதர இன்பமுடன்வந்தீர்கள்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கமாய்ப்பணிய
ஐயனாரும் அம்மனும்போய்மறைந்தார்
இப்படியாக இளங்கொடியாளேதுசொல்வாள்
பத்தாவேபத்தாவே பாராளும்பத்தாவே
உன்பேச்சைநான்கேளாமற் பிழைமோசம்போனேனே
வார்த்தைநான்கேளாமல் வகைமோசம்போனேனே
பெண்புத்தியாலேயல்லோ பிழைமோசம்வந்ததென்றாள்
தப்பாமல்வானம்பத்தா தலையிலிடித்ததங்கே
பேய்கொண்டபாவியைநான் பிறப்பென்றுநம்பிவந்தேன்
சண்டாளஅண்ணனைநான் சதமென்றுநம்பிவந்தேன்
என்-ஆசைக்கணவா நீ அன்பானவார்த்தைகேளும்

என்னைப்போல்பெண்சாதி இவ்வுலகிற்கிட்டாதோ
வேசிக்கிடையாளோ வெள்ளாட்டிக்கிடையாளோ
தாசிகிடையாளோ தகுமொருத்தியாகாதோ
நாட்டியப்பெண்களிலே நல்லபெண்கிட்டாதோ
உங்கள்குலமதிலே ஒருபெண்ணும்கிட்டாதோ
மனையாட்டிமாண்டாளென்று மாளவிதியுனக்கேன்
பெண்சாதிமாண்டாளென்று பின்னேமடியலாமோ
எனக்காகநீமாண்டால் ஏசாதோ இவ்வுலகம்
நீ-மாண்டுமடிந்தாக்கால்மண்டலத்தாரென்னசொல்வார்
செத்துமடிந்தாக்கால் சீமையுள்ளோரென்னசொல்வார்
எனக்காகஉன்னுயிரை ஏன்மாய்க்கவந்தீரிப்போ
என்றுமேகணவனுக்கு இயல்பாகத்தானுரைத்து
அண்ணடா அண்ணடா அண்ணியுடவார்த்தைகளை
கேட்டீரோ அண்ணவே கிளிமொழியாள்தன்வார்த்தை
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
அவளுடையதன்வார்த்தை அறியவேநீர்கேளும்
நான்வருஞ்சேதிதன்னை நாயகியாள்தான்கேட்டு
ஓடிக்கதவடைத்து ஒட்டிச்சுவர்மண் அறைந்தாள்
சாத்திக்கதவடைத்துச் சரியாகமண்ணறைந்தாள்
பண்ணுதபாடெல்லாம் பாவிபடுத்திவைத்தாள்
அண்ணடா அண்ணடா ஆரணங்கையிப்போது
ஆக்கினைசெய்யவேண்டாம் ஆழியில்வைக்கவேண்டாம்
இவளை-கல்லிலெழுதவேணும் கண்காணநாட்டவேணும்
காரியுமிழவேணும் கண்டார்சிரிக்கவேணும்
என்றுமேநல்லதங்காள் இயல்பாகத்தானுரைக்க
அப்போதுநல்லதம்பி ஆணழகனேதுசொல்வான்
எந்தன்பிறப்பேநீ இளங்கொடியேநல்லதங்கள்
திக்கற்றபாவியைப்போல் தெருவிலுருண்டாயோடி
தாயற்றபாவியைப்போல் தரையிலுருண்டாயோடி
இப்போ-நாணுண்டசீமையெல்லாம் நீயாளவேணுமம்மா
நீயாண்டசீமையெல்லாம் நானுளவேணுமம்மா
என்றுமேநல்லதம்பி இன்பமாய்ச்சொல்லுகையில்
அந்தமொழிகேட்டு ஆரணங்கேதுரைப்பாள்
அண்ணடா அண்ணடா அழகுசிகாமணியே
செத்தோரிருந்தோமானல் சீமைக்குஆகாது

இப்போ-மூளியலங்காரி மூதேவி நாயகியை
பூமியில்வைக்கவேணும் போகிறவர்பார்க்கவேணும்
கல்லிலெழுதவேணும் கடுகவேநாட்டவேணும்
காரியுமிழவேணும் கண்டார்நகைக்கவேணும்
என்றுமேதான்சொல்லி இன்பமாய்நல்லதங்காள்
அண்ணனைத்தான்பார்த்து அரிவையெடுத்துரைப்பாள்
என்-அண்ணுவே அண்ணுவே அன்பாகநீர்கேளும்
ஆசாரிதன்னைநீ அதிகவிரைவுடனே
அழைத்தோடிவாருமென்னு அரிவையெடுத்துரைப்பாள்
அப்போதுநல்லதம்பி அதிகதுரிதமுடன்
ஆசாரிதன்னை அவனழைத்தோடிவந்தான்
ஆசாரிதன்னைப்பார்த்து அரிவையெடுத்துரைப்பாள்
பட்டணத்திற்கீர்த்தியுள்ள பரங்கிரியாசாரி
எனக்கு-காசினியில்கோயிலொன்று கட்டிவையுமாசாரி
மாதமொருதிருநாள் மகிழச்சியாய்தானடத்தும்
வருஷமொருதிருநாள் வரிசையாய்தானடத்தும்
என்றுசொல்லிநல்லதங்கா ளேந்திழையுமப்போது
நல்லதங்காளேழுபிள்ளை நாட்டினில்வன்னிமரமாகி
வன்னிமரக்கண்ணுகி மாசின்றிநிற்கிறுர்கள்
நினைத்தவரமளித்து நீணிலத்தில்வாழ்ந்திருக்க
மச்சானும்மச்சானும் மங்கைநல்லதங்காளை
கண்டுமெகிழ்ந்திருவர் கைலாயஞ்சேர்ந்தார்கள்
சடையிற்பிறையணிந்த சங்கரனுர்தன்னருளால்
பாரிலுள்ளஆடவரும் பாலகரும்ஆரியரும்
நாரியருளங்களிக்க நல்லதங்காள்தன்கதையை
அஷ்டதிசைபுகழ அச்சிலிதைதானியற்றி
கற்ருேரும்மற்ருேரும் களிப்பாய்படிப்பதற்கு
சொற்குற்றமில்லாமல் சுத்தப்பிரதியதாய்
தம்மாலியன்றமட்டும் தப்பிதங்களைத்திருத்தி
இம்மாநிலத்தோர்புகழ ஸ்ரீமகள் கம்பெனியில்
பச்சைமயிலேறும் பார்வதிசுதனருளால்
அச்சிற்பதிப்பித்து அனைவோர்க்குமுதவினுர்
ஞானந்தரும்நூல்களை நாடோறும்அச்சியற்றும்
ஸ்ரீமகள்அச்சகமும் அதன் அலுவலகத்தாரும்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரூன்றி

ால்போல்ருசிக்க பாரில்மிகத்தான்வாழி
மூங்கில்போலன்னைசுற்றம் முசியாமல்தான்வாழி
ஓங்கிநால்வேத முயர்பலவுந்தான்வாழி
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

நல்லதங்காள் கதை முற்றிற்று.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 77066
EGMORE, MADRAS-600 008

சிறுவர் சிறுகதைகள்

பூவண்ணன் எழுதியவை

பச்சைப் பாவாடை	0	8	0
பொம்மை வண்டி	0	8	0
சேர நாட்டு வீரன்	0	8	0
பாபு சர்க்கஸ்	0	8	0
திருக்குறள் கதைகள் I	0	8	0
திருக்குறள் கதைகள் II	0	8	0
திருக்குறள் கதைகள் III	0	8	0
திருக்குறள் கதைகள் IV	0	8	0
வேடிக்கைக் கதைகள் I	0	8	0
வேடிக்கைக் கதைகள் II	0	8	0

விபரங்கட்கு:—

ஸ்ரீ மகள் கம்பெனி

122, வரதாமுத்தியப்பன் தெரு,

சென்னை-1.

வடுவூராரின் நாவல்கள்

		ரூ.	அ.
இராஜேந்திரமோகனா	...	2	0
மருங்காபுரி மாயகொலை	...	2	0
முத்துலக்ஷ்மி	...	2	0
நீலலோசனி	...	2	0
சோமசுந்தரம்	..	2	0
நங்கைமடவன்னம்	...	2	0
பச்சைக்காளி	...	2	0
சொக்கன் செட்டி	...	2	0
பூஞ்சோலையம்மாள்	...	2	0
துரைராஜா	...	2	0
சிங்கார சூர்யோதயம்	...	2	0
பூச்சாண்டி எம்மே!	...	2	0
சிவராம கிருஷ்ணன்	...	2	0
பிச்சுமுத்துகோனான்	...	2	0
பாவாடைச்சாமியார்	...	2	0
நவநீதம்	...	2	0
டாக்டர் சோணாசலம்	...	2	0
தங்கம்மாள்	...	2	0
வசந்த கோகிலம்	...	2	0
சமய சஞ்சீவி	...	2	0
கலியாணசுந்தரம்	...	2	0
மாயசுந்தரி	...	2	0

கலைமன்றம்—சென்னை-1.